# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. V Issue 3 June 2015

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| லைப் டிவைன் . . . . . . . . . . . . . | 2 |
| இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . | 12 |
| சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . | 13 |
| யோக வாழ்க்கை விளக்கம். . . . . . | 15 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 19 |
| அஜெண்டா . . . . . . . . . . . . . . . | 21 |
| வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள் . | 23 |
| பாரதம் நமக்குக் கற்றுத் தரும் நுணுக்கமான உண்மைகள் . . . . | 26 |
| அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . | 38 |
| அன்பர் அனுபவம் . . . . . . . . . . . | 53 |
| **அன்னை இலக்கியம்** | |
| பார்வைகள். . . . . . . . . . . . . . . . | 55 |


### ஜீவியத்தின் ஓசை

பொறுமை ஜீவன் பெற்ற ஞானம்.

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

**ஸ்ரீ அரவிந்தம்**

## லைப் டிவைன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

ஆங்கிலம்: லெஸ்லி ஜேகப்ஸ்
தமிழாக்கம்: வித்யா ரங்கன்
திருத்தம்: ஸ்ரீ கர்மயோகி

## XXVIII. Supermind, Mind and the Overmind Maya

Page 275
Para 5

There are two successive movements of consciousness.
They are difficult but well within our capacity.

Through them we can have access to the superior gradations of our conscious existence.
There is first a movement inward.
Instead of living in our surface mind, we break the wall.

The wall is between our external and our now subliminal self.
This can be brought about by a gradual effort and discipline.

Or it can be brought about by a vehement transition.
Sometimes a forceful involuntary rupture will do it.

The latter is by no means safe for the limited mind.

It is accustomed to live securely only within its normal limits.



## 28. சத்திய ஜீவியம், மனம், தெய்வீக மனத்தின் மாயை

ஜீவியத்தின் இரு அடுத்தடுத்த இயக்கங்கள் உண்டு.
அவை கடினமானவை, ஆனால் நம்மால் அடையக் கூடியவை.
அவற்றின் மூலம் நாம் நம் ஜீவனின் உயர் நிலைகளை எட்ட முடியும்.
இதில் முதலானது அகத்தை நோக்கி நகருவது.
மேல்மனத்தில் வாழ்வதை விடுத்து, அதன் சுவர்களை நாம் தகர்க்க வேண்டும்.
சுவர் நம் புறம் மற்றும் நம் அடி மனத்திற்கு இடையே உள்ளது.

இதைப் படிப்படியான முயற்சியாலும் கட்டுப்பாட்டாலும் செய்ய முடியும்.
வேகமான மாற்றத்தாலும் இதைச் செய்யலாம்.
சில நேரங்களில் அதிக சக்தி கொண்ட தன்னிச்சையற்ற தகர்வு இதை நிகழ்த்தும்.
ஆனால் இது போல் நிகழ்வது குறுகிய மனத்திற்கு பாதுகாப்பான செயல் அல்ல.
மனம் பாதுகாப்பாக அதன் குறுகிய எல்லைக்குள் இருப்பதை பழக்கமாகக் கொண்டுள்ளது.

But in either way, safe or unsafe, the thing can be done.

What we discover within this secret part of ourselves is an inner being.

We discover a soul, an inner mind.

We discover an inner life, an inner subtle-physical entity.

It is much larger in its potentialities.

It is more plastic, more powerful than our surface mind.

It is more capable of a manifold knowledge than our surface mind, life or body.

It is more capable of a dynamism than the mind, life or body.

It is capable of a direct communication with the universal forces.

It can communicate with universal movements and objects of the cosmos.

It is capable of a direct feeling and opening to them.

It can have a direct action on them.

It can even widen itself beyond the limits of the personal mind.

It can widen beyond the personal life, the body.

Then it feels itself more and more a universal being.



இருந்தாலும், பாதுகாப்பான அல்லது பாதுகாப்பற்ற எந்த நிலையிலும் இதைச் செய்ய முடியும்.

இந்த ரகசியமான பகுதிக்குள் நாம் நம் அகத்திற்குரிய ஜீவனைக் கண்டடைகிறோம்.

அங்கு நாம் ஆத்மாவையும் உள்மனத்தையும் கண்டறிகிறோம்.

அக வாழ்வை, அகத்தின் சூட்சும உடற்பொருளை கண்டறிகிறோம்.

அதன் திறன் மிகப் பெரியது.

அது மேல்மனத்தைவிட அதிக நெகிழ்வானது மற்றும் அதிக சக்தி வாய்ந்தது.

அது மேல்மனம், வாழ்வு, உடலைவிட பன்மடங்கு ஞானத் திறன் உடையது.

அது மனம், வாழ்வு, உடலைவிட அதிக சக்தி உடையது.

பிரபஞ்ச சக்திகளுடன் நேரடித் தொடர்பு கொள்ளும் திறன் உடையது.

பிரபஞ்சத்தின் இயக்கங்களுடனும் பொருள்களுடனும் அது தொடர்பு கொள்ள முடியும்.

அது நேரடியாக உணர்ந்து அவற்றிற்குத் தன்னை வெளிப்படுத்தும் திறன் உடையது.

அது நேரடியாக அவற்றில் செயல்படக் கூடியது.

தனிப்பட்ட மனத்தின் வரையறைகளைத் தாண்டி அது விரிய முடியும்.

தனிப்பட்ட வாழ்வு, உடலைத் தாண்டி அது தன் பரப்பை நீட்டிக்க முடியும்.

அப்போது அது தன்னை அதிகமாக, பிரபஞ்ச ஜீவனாக அறிய முடியும்.

It is no longer limited by the walls of our narrow mental, vital, physical existence.

This widening can extend itself.

It can widen to a complete entry into the consciousness of cosmic Mind.

It can widen into unity with the universal Life.

It can widen even into a oneness with universal Matter.

But that is still an identification with a diminished cosmic truth.

Or else it is an identification with the cosmic Ignorance.

Page 276
Para 6

This entry into the inner being once accomplished, the inner Self is found.

It is found to be capable of an opening.

It is capable of an ascent upwards.

It ascends up into things beyond our present mental level.

That is the second spiritual possibility in us.

There is a first most ordinary result.

It is the discovery of a vast static and silent Self.

We feel it to be our real or basic existence.



அது இனியும் குறுகிய மனம், உணர்வு, உடலின் வாழ்வாலான சுவர்களால் கட்டுப்படுத்தப்படாது.

பரந்தது மேலும் தன்னை விரிவுபடுத்திக் கொள்ள முடியும்.

பிரபஞ்ச ஜீவியத்திற்குள் முழுமையாக நுழையும் அளவிற்கு அது விரிய முடியும்.

பிரபஞ்ச வாழ்வோடு ஐக்கியமாகும்படி அது பரவ முடியும்.

பிரபஞ்ச உடலுடன் ஒருமையை அடையும் வகையிலும் அது தன்னை விசாலப்படுத்திக் கொள்ள முடியும்.

ஆனால் அந்த ஒன்றுதலும் ஒரு குறைக்கப்பட்ட பிரபஞ்ச சத்தியமாகும்.

அல்லது அது பிரபஞ்ச அறியாமையுடன் ஒன்றுதலாகும்.

இப்படி அக ஜீவனுக்குள் நாம் நுழைந்தால், நம் ஆத்மாவைக் காணலாம்.

அது வெளி வரும் நிலையில் தயாராக இருப்பதைக் காணலாம்.

அது அடுத்தடுத்த நிலைகளை நோக்கி உயரும் தகுதியுடையது.

தற்போதைய மனத்தின் நிலையைக் கடந்த உயர்ந்த இடங்களை அடையும் ஏற்றம் பெறுகிறது.

அது நம்மிலுள்ள, அடுத்த அடையக்கூடிய ஆன்மிக உயர்வாகும்.

இங்கு முதலான மிகச் சாதாரண பலன் ஒன்று உண்டு.

அது பரந்து விரிந்த அசையாத அமைதியான பிரம்மத்தைக் கண்டு கொள்வது.

நாம் அதை நம் உண்மையான அல்லது அடிப்படையான சத்தியம் என்று உணர்கிறோம்.

It is the foundation of all else that we are.

There may be even an extinction, a Nirvana.

It will be an extinction of both of our active being and the sense of self.

It will be an extinction into a Reality that is indefinable and inexpressible.

But also we can realise that this self is not only our own spiritual being.

It is also the true self of all others.

It presents itself then as the underlying truth of cosmic existence.

It is possible to remain in a Nirvana of all individuality.

It is possible  to stop at a static realisation.

We can regard the cosmic movement as a superficial play.

Or we can regard it as an illusion imposed on the silent Self.

It may be some supreme immobile, immutable status beyond the universe.

But another less negative line of supernormal experience offers itself.

For there takes place a large dynamic descent.



அது நம் மற்ற அனைத்திற்கும் அடிப்படையானது.

அனைத்தும் அழிந்து மறைந்த சூன்ய நிலையும் அங்கு இருக்கலாம்.

நம் செயலாற்றும் ஜீவன் மற்றும் சுய புலனுணர்வு இரண்டும் அழிந்த நிலை அது.

விவரிக்க முடியாத, விளக்க முடியாத, சத்தியத்தினுள் இழந்த நிலை அது.

ஆனால் இந்த ஆத்மா நம் சொந்த ஆன்மிக ஜீவன் மட்டுமல்ல என்பதை நாம் உணர முடியும்.

இது மற்ற அனைத்து ஜீவன்களின் உண்மையான ஆத்மாவும் ஆகும்.

பிரபஞ்ச வாழ்வின் அடிப்படைச் சத்தியமாக அது தன்னை வெளிப்படுத்துகிறது.

அனைத்துத் தனித்தன்மைகளையும் இழந்து முற்றும் துறந்த நிலையில் நிலைத்திருக்க முடியும்.

அசையா நிலையின் சித்தியில் நிலை பெற முடியும்.

பிரபஞ்சத்தின் இயக்கத்தை ஒரு மேலெழுந்தவாரியான லீலையாக நாம் கருதலாம்.

அல்லது அமைதியான ஆன்மாவின்மீது திணிக்கப்பட்ட ஒரு மாயையாகக் கருதலாம்.

அது பிரபஞ்சத்தைக் கடந்த மிகச் சிறந்த, இயக்கமற்ற, மாற்றமற்ற ஒரு நிலையாக இருக்கலாம்.

ஆனால் பிறிதொரு, எதிர்மறை நிலை குறைவான, அசாதாரணமான அனுபவம் நமக்குத் தன்னை உணர்த்துகிறது.

அங்கு வீரியமான சக்தியின் கீழிறங்குதல் நடைபெறுகிறது.

It is a descent of light, knowledge, power, bliss or other supernormal energies.

They descend into our self of silence.

We can ascend too into higher regions of the Spirit.

There its immobile status is the foundation of those luminous energies.

In either case we have risen beyond the mind of Ignorance.

We have risen into a spiritual state.

But in the dynamic movement, there is a greater action of Consciousness-Force.

It may present itself simply as a pure spiritual dynamis.

That dynamis would not be otherwise determinate in its character.

Or it may reveal a spiritual mind-range.

There  mind would no longer be ignorant of the Reality.

It is not yet a supermind level.

But it is derived from the supramental Truth-Consciousness.

It is still luminous with something of its knowledge.

Contd...

**ஜீவிய மணி**

*பேசுவதைவிட மௌனம் உயர்ந்தது.*
*மௌனத்தைவிட மௌனம் கலையாமல் பேசுவது உயர்ந்தது.*



அது ஒளி, ஞானம், ஆற்றல், ஆனந்தம் அல்லது மற்ற அசாதாரண சக்திகளின் கீழிறங்குதல் ஆகும்.

அவை நம் அமைதியான ஆத்மாவினுள் இறங்குகின்றன.

ஆன்மாவின் மேல்நிலைகளுக்கு நம்மால் உயரவும் முடியும்.

அங்கு அதன் அசைவற்ற நிலை அவ்வொளி பொருந்திய சக்திகளின் அடிப்படையாகிறது.

எப்படியானாலும் மனத்தின் அறியாமையைக் கடந்து உயர்ந்து சென்றோம்.

ஒரு உயர்ந்த ஆன்மிக நிலையை அடைந்தோம்.

ஆனால், சக்தி வாய்ந்த சலனத்தில் சித் சக்தியின் கூடுதலான செயல்பாடு உள்ளது.

அது எளிமையான ஒரு தூய ஆன்மிக சக்தியாகத் தன்னை வெளிப்படுத்துகிறது.

இல்லையெனில், அந்தச் சக்தி நிர்ணயத்தை அதன் இயல்பாகப் பெற்றிருக்க முடியாது.

அல்லது அது ஒரு ஆன்மிக மனத்திற்கான பரப்பை வெளியிடுவதாக இருக்கலாம்.

அங்கு மனம் சத்தியத்தை அறியாத நிலையில் இருக்காது.

இருப்பினும் அது சத்திய ஜீவிய நிலையாகாது.

ஆனால் அது சத்திய ஜீவியத்திலிருந்து வெளி வந்ததாகும்.

இருந்தாலும் அதன் அறிவில் ஏதோ ஒரு பிரகாசம் உள்ளது.

தொடரும்...

**ஜீவிய மணி**

*பேச்சு மூலம் யோகப் பலன் பெற பேசும் ஆசை அழிந்து தேவையான அளவுக்குப் பேசுவது முறை* **(controlled speech)** *என்கிறார் அன்னை.*

இம்மாதச் செய்தி

# இறைவனின் திருவுள்ளத்தை இகவாழ்வில் நிறைவேற்றுவது இழிவு.





## பெரு வாழ்வின் தெய்வங்கள் ஆளும் நாடுகள்

**Canto Six**
**Page 173:**
**As one who between dim receding walls**
*மறையும் மங்கிய சுவரிடையே வாழும் மனிதன் போல*

- ✡ குடைந்த குகையின் வாயில் தெரியும் தெறிக்கும் ஒளி
- ✡ ஜோதியை நம்பி, சுதந்திரமாக நடந்து
- ✡ பரந்த வெளியின் சுதந்திர மூச்சு நெருங்கி வந்து
- ✡ மங்கிய குழப்பத்தினின்று தப்பித்து வந்தான்
- ✡ எதுவும் சாதிக்க முடியாத இந்த உலகினுள் வந்தான்
- ✡ அர்த்தமற்ற லோகத்தின் அடிபட்ட ஜனனம்
- ✡ அசத்தை விட்டகலும் புருஷன் பயந்து ஓடி
- ✡ வாழமுயன்று, நெடுநாள் வாழும் திறனின்றி
- ✡ எண்ணம் செறிந்த புருவமெனும் வானம் மின்னலாகத் தெறித்தது
- ✡ வதைந்து, ஐயம் நிறைந்த பார்வை சிறகடித்து வந்து
- ✡ கனவேகக் காற்று எழுப்பும் குரல் தேடும் சவால்
- ✡ சூன்யத்துள் வழிதேடிக் கதறும்
- ✡ குருட்டு ஆத்மாக்கள் இழந்த ஜீவனைத் தேடுவது போல
- ✡ வழியறியாத உலகின் வீதிவழியே அலைந்து
- ✡ காலமும் இடமும் கண்டெடுக்க முயலும் எழாத கேள்வி
- ✡ மறுத்தபின் பிறந்த சந்தேகமான நம்பிக்கை

- ✡ ரூபமும், சக்தியும், வாழும் உத்தரவு பெற்று
- ✡ சிருஷ்டியிலில்லாதது பிறந்து எழுந்து
- ✡ இதயம் தேர்ந்தெடுத்து, மனம் உழன்று உய்ந்து
- ✡ பார்வையிலில்லாத அருள், ஆச்சரியமான ஆதரவு எழுந்து
- ✡ நிலையற்றதில் நிலையான ஆனந்தமெழுந்து
- ✡ யாத்திரை நிலையற்ற விநோதமான நிலையையடைந்து
- ✡ அறியாத ஆத்மாவுடன் விளையாடும் ஜீவியம்
- ✡ பிறப்பு பெருவாழ்வின் சிறு நிகழ்ச்சியாகி
- ✡ அணுகி வரும் மந்திரம் சக்தியைக் காப்பாற்ற இயலாமல்
- ✡ ஆர்வமான செயல் வழியறியாமல் தடுமாறி
- ✡ விபரீதக் கணக்கெழுதும் இயல்பான நிகழ்ச்சி
- ✡ உருவாக்கிய ரூபங்களை கட்டுப்படுத்த முடியாமல்
- ✡ பல்வகைப் பெருக்கம் பலனைக் காப்பாற்றத் தவறி
- ✡ பூஜ்யத்தைவிடச் சிறியது ஒன்றை மீறி உயர்ந்து

## ஜீவிய மணி

*பிரார்த்தனை பலிக்கும்.*
*மனத்தின் உயர்வுக்கு ஏற்ப அன்னையின் உயர்வு செயல்படும்.*
*பலன் நம் நிலைக்காகவும், முறை நம் தூய்மைக்காகவும் அமையும்.*
*உச்சக்கட்டப் பலனும், உச்சக்கட்ட உயர்வும் சேரலாம்.*
*எனினும், நடைமுறையில் காண்பது இல்லை.*
*இருக்கக் கூடாது என்பது சட்டம் இல்லை.*



## யோக வாழ்க்கை விளக்கம்

### 22/20. எண்ணம் சிந்தனையின் செயல், முடிவு செயலின் சிந்தனை

- நாம் நம்மை 'நாம்' என அறிகிறோம். அது பெரும்பாலானோர்க்கு உடல். மனம் தெளிவானவர்க்கு அது 'நான்', என் எண்ணம், என் திட்டம், என் கொள்கைகள் என்ற நம்பிக்கைகள்.
- *நாம் நம் உணர்ச்சியைக் கருதுவதில்லை. உணர்ச்சியே மனிதன். எண்ணம் என நினைப்பதும் உணர்ச்சியே.*
- அறிவுள்ளவன் உடலைக் கருத மாட்டான். உடலைப் பெருமையாக அறிபவன் கையை மடக்கி உடல் வலிமையைப் பிரபலமாகக் கருதுவான்.
- உணர்ச்சி மேலிட்டவனுக்கு அறிவிருக்காது, உடல் நினைவு வராது. ''எனக்குக் கோபம் வரும்'' என்பான்.
- உடலும், உயிரும், மனமும் சேர்ந்ததே மனிதன், நாம் என்பது. அத்துடன் ஆத்மாவும் சேரும் என நாம் அறிவதில்லை.
- பயில்வான் பெருமையாக பீடுநடை போடுவான். ''எனக்கு எவரும் ஈடில்லை'' என அவன் மனம் கூறும்.
- *உணர்வால் உயர்ந்தவன் ராஜ நடை போடுவான், ''நானே ராஜா'' என அவன் நினைப்பதை நடை வெளியிடும்.*
- அறிவிற்சிறந்தவனுக்கு அடக்கமோ, கர்வமோ எழும். ''யாருக்கு என்ன தெரியும்?'' என நினைப்பான்.
- செய்தால் வேலை, செய்வது எனில் உழைப்பது. உடலால் உழைப்பதே செயல்.
- செயலுக்கு வீர்யம், தீவிரம், சுறுசுறுப்பு, பரபரப்பு, பிரபலம் தருவது தெம்பு, உணர்ச்சியின் வேகம்.

- 12 மாதத்தில் அனைவரும் கட்டும் வீட்டை ஆறு மாதத்தில் அழகாக அப்படிப்பட்டவர் முடிப்பார்.

  எலக்ஷனுக்கு ஒரு பீரியட் முழுவதும் ஆதரவு தேட வேண்டும். ஒரு வேட்பாளருக்கு 6 மாதம்முன், 3 மாதம்முன் ஒரு புதுத் தொகுதியில் இடம் கொடுத்தால், 'கட்சி இல்லை என்று சொல்லாமல் இப்படிச் செய்து விட்டார்கள்' என்பார். எவரும் ஏற்க மாட்டார்கள். *உணர்வில் தெம்பு, தெளிவுள்ளவர் ஏற்பார்.* மாதக்கணக்காக, வருஷக்கணக்காக மற்றவர் தேடும் ஆதரவை இந்த வேட்பாளர் சீட் கொடுத்தவுடன் வந்து முக்கியஸ்தர்களைக் கண்டு முக வசீகரத்தால் கவர்ந்து குறுகிய காலத்தில் வெற்றி பெறுவார்.

  *அறிவிற்சிறந்தவன் இதுபோன்ற நிலையில் செய்வது அறிவுடைய செயல்.*

  அறிவுடைய செயலுக்கு அறிவுடைய மக்களே ஓட்டுப் போட மாட்டார் என்பது அறிவு.

  யதார்த்தவாதி பள்ளிக்கூடம், ரோடு பற்றி திட்ட-மிடுவான்.

  *மக்கள் உணர்வு நிறைந்த இடம் அவர்கட்கு முக்கியம். நம் நாட்டில் அது ஜாதி.*

  தம் ஆழ்மன உணர்வு எதை அனுதினமும் நாடுகிறது என்பதை ஊர் அறியாது.

  **அது மரியாதை - Prestige.**

  அனைவர் மரியாதையும் உயரும் செயலை அறிவிற்-சிறந்தவன் நாடுவான்.

  ஊர் இரவோடு இரவாக ஒருவர் தவறாமல் அவனை ஆதரித்து ஆர்ப்பாட்டம் செய்வர்.

- இது எண்ணம், அவன் மனம் நெடுநாளாக சிந்தனை செய்த எண்ணம். அது பலிக்கும்.
- எதிரி கூட்டத்தில் எவரும் செய்யாத காரியமான மாலையைப் போட்டு விட்டால் தலைவர் கண் நிறையும்.



- ''உன் முகத்தில் விழிக்க மாட்டேன்'' என்ற தாயார், மகன் டாக்ஸியில் கோயிலுக்குப் போனதைக் கேள்வியுற்று ''ஏன் என்னைக் கூப்பிடவில்லை'' என வீடு வந்து குறைப்படுவார்.
- திருமண ஏற்பாட்டில் குடும்பப் பெரியவர் சித்தப்பா கோபப்பட்டு எழுந்து போகிறார்.

  'அண்ணன் மகன் அதிகப்பிரசங்கி' என திருமணத்திற்கு வரக்கூடாது என்ற முடிவோடு போகிறார். பையன் பத்திரிக்கை அடிப்பதையும் மறந்து விட்டார்.

  அவரைத் தேடிப் பத்திரிக்கை எடுத்துப் போனால் ''மரியாதைக்காக எனக்கு யாரும் வேண்டியவரில்லை. எனக்கு மட்டும் ஒரு பத்திரிக்கை கொடு'' என்றார்.

  பத்திரிக்கை *அவர் பெயரில் அடிக்கப்பட்டிருந்தது.* முகம் மலர்ந்தது.

  100 பத்திரிக்கை எடுத்துக் கொண்டார். இது உலகம். அறிவு இதை அறியும்.

- சோழன் அரசன். சிதம்பரம் தீட்சிதர்கள் மூவாயிரவர் பிரபலமாக ஆண்ட காலம்.

  இவர்களைப் பற்றிய செய்திகள் ஏராளம். பக்தி பவித்திரமாயிருந்த நேரம்.

  3000 குடும்பங்களையும் கோயில் ஆதரிக்கும் நிலை-யிலிருந்த நாட்கள்.

  *பக்தியின் செயல் பவித்திரமான செயல்* என்பது தத்துவமில்லை, நடைமுறை.

  முறை தீட்சிதர் அர்த்த ஜாம பூஜை முடிந்து ஒரு வில்வதளத்தை நடராஜர் சிலைமுன் வைத்து விட்டு, விமானம் காவலுக்காக கோபுரத்தில் படுத்துக் கொள்வார்.

  மறுநாள் காலையில் *வில்வதளம் பொன் இலையாக இருக்கும்.* இது சாஸ்த்திரப்படி நடக்கும் சம்பிரதாயம்.

  அவர்கள் ஆட்சி ராஜ கம்பீரமானது. சோழ அரசனும் அவர்களை மீற முடியாது.

  திருவாசக ஓலைச் சுவடிகள் அவர்களிடமிருப்பதைச் சோழன் கேட்டு அனுப்பினான்.

*எழுதியவரே வந்து கேட்டால் கிடைக்கும் என பதில் வந்தது. அரசனும் பணியும் நேரம்.*

நால்வர் சிலைகளை அரசன் பரிவாரத்துடன் எடுத்து வந்தான். செயல் திறனை இழந்த நேரம் அறிவு சிந்தனையால் எண்ணமாகி செயல்பட்டது. தீட்சிதர் அவை சிலை எனக் கூற முடியாது. *அந்தப் பதிலுக்கு எதிர் பதிலுண்டு ''நடராஜர் சிலையல்லவா?'' எனக் கேட்கலாம்.*

**தீட்சிதர் பணிந்தனர்.**

**குதர்க்கம் வெல்ல முடியாது.**

ஒரு சமயம் சங்கராச்சாரியார் கோவிலுக்கு வந்ததாக ஒரு செய்தி.

அவரையும் பூஜையின் பொழுது வெளியே நின்று வணங்க உத்தரவிட்டனர்.

*கோபத்தால் சங்கராச்சாரியார் சாபமிட்டதாகக் கதை.*

*அன்றிலிருந்து வில்வதளம் வில்வதளமாகவே இருந்தது. பொன்னாக மாறவில்லை.*

## ஜீவிய மணி

**Mother, Mother** *என்று பேப்பரில் ராமஜெயம் போல் எழுதுவது உடலுக்குரிய முறை. வாயால்* **Mother** *என்பது உணர்வுக்குரிய முறை. மனத்தால்* **Mother** *என்பது மனத்திற்குரியது. மௌனமாகித் தானே* **Mother** *என்ற சொல் உள்ளே எழுவது ஆன்மாவுக்குரிய முறை. அதிர்ஷ்டத்தை நாடும் மனம் தானே அதை மறந்து அன்னையை நாடுவது சத்திய ஜீவியத்திற்குரிய முறை.*

**சமர்ப்பணம் சத்திய ஜீவிய முறையாகும்.**



## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### 113. மிகச் சிறியது மிகப் பெரிய பலன் தருவது

- ஒரு கல்லை பழத்தை நோக்கி எறிந்தால் ஜெயித்தால் ஒரு பழம் விழும்.
- கல்லெறிவது ஒரு திறமை. அது உடல் திறமை. உடலின் சூட்சுமத் திறமை.
- *ஒரு கல்லால் ஒரு பழத்தையடித்தால் மரத்திலுள்ள எல்லாப் பழமும் விழுவது நாமறியாதது.*

  ஏகலைவன் பெற்ற திறமை அனந்தமாகப் பூர்த்தியாவது.

  ஏகலைவன் அடி மனத்தில் துரோணரை எட்டி வில் வித்தை கற்றான்.

  அடிமனம் பிரபஞ்சம் முழுவதும் பரவியது. துரோணருக்கு வில் வித்தை தவிர வேத ஞானம் உண்டு. ஏகலைவன் அதை நாடவில்லை. அதே அடி மனத்தில் பிரபஞ்ச ஆச்சாரியார் அனைவரும் உண்டு. *ஏகலைவன் அடி மனத்தை எட்டியதால், உலகிலுள்ள அவ்வளவு ஆச்சாரியார்களுடைய ஞானத்தையும் வேண்டுமானால் பெற்றிருக்கலாம்.*
- டிக்க்ஷனரியை ஸ்பெல்லிங் பார்க்க மட்டும் உபயோகிப்பவருண்டு.
- அதில் சொல்லின் பொருளும், அதிலிருந்து எழுந்த மற்ற சொற்களும், அவற்றின் பயனும் உண்டு. மேலும் சொல்லின் வேர் உண்டு. அச்சொல் வேறு மொழியிலிருந்து வந்திருந்தால் அந்த மொழியும் அங்கு எழுதப்பட்டிருக்கும்.

  **O.E.D.** ஆக்ஸ்போர்ட் இங்கிலீஷ் டிக்க்ஷனரியானால் அச்சொல் எந்த ஆண்டு எந்த ஆசிரியரால் எப்படிப் பயன்படுத்தப்பட்டது எனவும் கூறும்.

  அச்சொல்லின் எழுத்துகள் கடந்த நூற்றாண்டில் எப்படி மாறின எனவும் எழுதியிருக்கும்.

- *விளையும் பயிர் முளையிலேயே தெரிவது இந்த அம்சத்தால்-தான்.*
  நீக்ரோ சிறுவனை ஒருவர் பரிதாபப்பட்டு லபாரட்டரியில் வேலையில் சேர்த்தார். அவனுக்குப் பறவைகள் நிறம் அறிய ஆவல். அந்த ஆவல் ஞானமாகி, திறமையாகி நோபல் பரிசு பெற்றான்.
- அன்பர் ஒருவர் வாழ்வில் நடந்த சிறு காரியம் மிகப் பெரிய பலனைக் கொடுத்தால் *அவருக்குப் பூரண யோகம் பலிக்கும் என்று பொருள்.*
- பெரும் ஜமீன்தார். இரண்டாம் உலகப் போர் முன் அன்னையைத் தரிசித்து அதன் அற்புதத்தை அறிந்து தன் ஏழு குழந்தைகளுடன் அன்னையை ஏற்று தன் பொருளை அர்ப்பணம் செய்தார். இவர் குடும்பத்தார் செய்யும் எந்தச் சிறு காரியமும் பெரும் பலனைத் தரும். பூரண யோகத்தை ஏற்றால் அனைவருக்கும் பலிக்கும். அதை வெளிப்படுத்-துவது இந்த அம்சம். மனிதன் உள்ள நிலையில் **(plane)** செயல் பலிக்கும். ஆத்மா **(soul)** ஆன்மிக **(spiritual)** நிலையிலிருந்தால் அவர் இன்று செயல்படுவது எந்த நிலையானாலும் பலன் உயர்ந்த நிலையில் எழும். இதே காரணமாக பெரிய இடத்துப் பிள்ளைகள் செய்யும் காரியங்களுக்குப் பெரும் பலன் கிடைப்பதால் அவர்களால் கட்டுப்பாடான வாழ்க்கையை ஏற்க முடிவதில்லை.

## ஜீவிய மணி

*தெரிவது இருப்பதாகத் தெரிவது ஆத்ம விழிப்பு.*

***ஆத்ம விழிப்பு ஆத்மா சித்திப்பது.***

*சித்தியை நாடுபவன் மனிதன்.*

***சித்தி தேவைப்படாத சித்தி மூலம், முடிவு, Self-perfection.***



## அஜெண்டா

### ஐக்கியமே இறைவன். சிருஷ்டி பிரிவினைக்குரியது

Volume 12, page 73

- இறைவன் உலகைப் படைத்தார் எனில் இறைவன் வேறு, உலகம் வேறு என்று இரண்டாகப் பிரிகிறது.
- *இது பிரிவினைக்குரிய தத்துவம்.*
- எல்லாப் பிரிவினைகளும் இதிலிருந்து எழுகின்றன.
- கால் வலிக்கிறது எனில் கால் வேறு நாம் வேறு என நாம் அறிகிறோம் என்றாகும். நாமும் காலும் ஒன்று என நினைக்க முடியாது. நினைத்தால் வலி போய் விடும்.
- எனக்கு வயிற்று வலி என அன்னையிடம் கூறியவர் அத்துடன் நான் உண்மையானவன் என்றார்.
  *உனக்கு உண்மையுண்டு. உன் வயிற்றிற்கு உண்மையில்லை என்றார் அன்னை.* அன்னையின் ஒளி வலிக்கும் வயிற்றில் சில நிமிஷம் தெரியுமானால், வலி மறையும். ஒளி இழந்த ஒற்றுமையை மீண்டும் தரும்.
- மனம் பிரிக்கும் கருவி.
- மனம் பலிக்காததில்லை. பிரம்மத்தை இரண்டாகப் பிரித்து க்ஷரப் பிரம்மம், அக்ஷரப் பிரம்மமாக்கியது.
- சச்சிதானந்தத்தை மனம் சத், சித், ஆனந்தம் எனப் பிரித்தது.
- புருஷனை இரண்டாகப் பிரித்து புருஷப்-பிரகிருதியாக்கியது.
- ஈஸ்வரனையும் பிரித்து ஈஸ்வர சக்தியாக்கியது.
- மனம் தன்னைப் புலன்களினின்று பிரித்தது.
- புலன்களை ஐந்தாகப் பிரித்தது.
- எண்ணத்தை எண்ணம் - உறுதியாகப் பிரித்தது.
- செயலை நல்லது கெட்டது எனப் பிரித்தது.

- ஒளியை ஒளி - இருள் எனப் பிரித்தது.
- சத்திய ஜீவியம் சுமுகமாக பரஸ்பர உணர்வால் பிரிந்த நிலையில் உள்ளவற்றை ஒன்று சேர்க்கும்.
- *சத்திய ஜீவியத்தில் எண்ணமும், உறுதியும் ஒன்றே.*
- ஜீவனும், ஜீவியமும் மனத்தில் பிரிந்துள்ளன. சத்திய ஜீவியத்தில் இரண்டும் ஒன்றே.
- இறைவன் - இயற்கை என்பது சிருஷ்டி.
- இயற்கை இறைவனானால் ஈஸ்வரன் சுப்ரீமாக மாறுகிறான்.
- பிரபஞ்சம் பிரம்மம் என்று பிரிந்து மனத்திற்குத் தோன்றுவது சத்திய ஜீவியத்தில் ஒன்றாகும்.
- இறைவனே உலகமானார் எனில் ஆரம்பத்திலேயே பிரிவினை அழியும்.
- ஆழ்மனம், பரமாத்மா பிரிந்த நிலை.
- அவை இணைய பிரபஞ்சத்தைக் கடந்த பிரம்மத்தை அடைய வேண்டும்.
- அன்பு, சந்தோஷம், அழகு என்ற மூன்றும் சேர்ந்து ஆனந்தமாகிறது.

o✤o

## ஜீவிய மணி

*அன்பர்கள் தம்மைத் தொடர்ந்து வரும் வாய்ப்புகளை விட்டு அவசரமாக விலகுவதை நாம் பலமுறை கண்டுள்ளோம். 'அன்னை கொடுப்பதையெல்லாம் பெற்றுக் கொள்ள முடியவில்லை' என்பதைக் கேள்விப்படுகிறோம்.* **Man proposes, God disposes** - *'மனித விருப்பத்தைத் தெய்வம் ரத்து செய்கிறது' என்ற வாழ்க்கைக்கு உரிய சொல் அன்னையிடம் தலைகீழே மாறி* - **Mother Proposes, man disposes** - *'அன்னை ஆரம்பிக்கின்றார், அன்பர் மறுக்கிறார்' என்றாகிறது.*

**அன்னை மறப்பதேயில்லை.**
**மனிதனுக்கு நினைவே வருவதில்லை.**



# வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள்

(அக்டோபர் 2013 இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

7. வெளியிலிருந்து வரும் தூண்டுதல்களுக்கு உடனே **response** வழங்க வேண்டாம். எப்பொழுதுமே சற்றுப் பின்வாங்கி மறுபரிசீலனை செய்து அதன் பின்னர் **response** வழங்குவது நல்லது. அப்படிப் பின்வாங்குவது முதற்கட்டம். சலனம் இல்லாமலிருப்பது இரண்டாம் கட்டம். நிரந்தர சமநிலை அடைவது மூன்றாம் கட்டம்.

சமநிலை என்பது **equality**. இது அனந்தத்தின் ஜீவியம் **(consciousness of Infinity)**. அனந்தம் சமநிலையின் ஆன்மிக மூலம். வாழ்வில் சமநிலை பொறுமையாக வெளிப்படுகிறது.

சமநிலையை எய்த முனைவது அனந்தத்தை அடைய முயல்வதாகும். பொறுமை வாழ்வில் அனந்தமாகச் செயல்-படுகிறது என்பது விளக்கம்.

பகவான் பொறுமைக்கு ஒரு விளக்கம் தருகிறார். தனக்கு 1914-இல் பொறுமையில்லாத நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார். **Synthesis**-இல் முதல் அத்தியாயத்தில் கடைசி வாக்கியம் பொறுமையின் விளக்கம். சாஸ்த்திரம், உற்சாகம், குரு, காலம் யோகத்தில் செயல்படுவதை விளக்கும் அத்தியாயம் இது. காலம் என்ற கருத்தைப் பொறுமை மூலம் பகவான் கூறுகிறார். யோகம் பயில சாஸ்த்திர ஞானம் தேவை. அதைப் பெற்றபின் அதை நிறைவேற்றும் உற்சாகம் தேவை. ஞானமும், உற்சாகமும், சரியான மனித குருவைக் காட்டும். மனித குரு முடிவானவரில்லை. அந்தராத்மா அசரீரியாக எழும்வரை அவர் தேவை. அசரீரி, வாணி, **inner voice** என்பது குருவாகச் செயல்படும். ஒரு முறையும் தவறாது. அதைப் பணிந்தால் அசரீரி ஜகத் குருவாகும். அதுவே உண்மையான குரு.

இந்தக் குரு செயல்பட்டு பலிக்கக் காலம் கருவி. காலம் என்பது ஆத்மாவின் அகச் சலனம். இடம் அதன் புறச்சலனம். இடத்தைக் கடந்தவன் காலத்தை அடைவான். நமக்கு இடம்

என்பது புலன்களின் செயல்கள். புலன்கள் செயல்பட்டால் மனத்தில் எண்ணம் ஓடும். ஓடும் எண்ணங்கள் நின்றால் புலன்களின் செயல்கள் நின்றதாகப் பொருள். ஓடும் எண்ணம் நின்றபின் சிந்தனை இருக்கும். சிந்தனை மனத்தின் ஆழத்திற்குரியது. சிந்தனை நிற்பது ராஜ யோகம். ஓடும் எண்ணம் நிற்பது ஞானயோகம்.

ஞான யோகம் முற்றி ராஜ யோகமானால் ஓடும் எண்ணங்களும் சிந்தனையும் கரையும்.

ஓடும் எண்ணங்களும், சிந்தனையும் மனம். இவை நின்றால், கரைந்தால் மனம் செயல்படுவது நிற்கும். ஓரளவு மனத்தைக் கடந்தவராவோம். மனத்தைக் கடந்ததற்கு அடையாளம் **(Censor)** எச்சரிக்கை அடங்குவது, அழிவது. மனத்தைக் கடந்தவன் ஆத்ம விழிப்புப் பெற்றவன். மனம் எதிர்பார்க்கும், சிந்திக்கும், அவசரப்படும். மனோ வேகத்தில் செயல்படும். மனம் அழிந்து அல்லது அடங்கினால் ஆத்மா வெளிவரும். அது பொறுமையே உருவானது. பொறுமை காலத்தின் கருவி என்கிறார் பகவான். அதை விளக்கும் வாயிலாக பொறுமையின் இரு அம்சங்களைக் கூறுகிறார்.

1. க்ஷணத்தில் செயலை முடிக்கும் திறமை முதல் அம்சம்.
2. செயல் முடிய யுகங்கள் இருப்பதால் அவசரம் அழிந்து அதற்குரிய பொறுமை எழ வேண்டும்.

அவசரம் அழிவது மனம் அழிவது. பொறுமை எழுவது ஆத்மா விழித்துச் செயல்படுவது. மனம் அழிந்து ஆத்மா செயல்பட்டால், காரியம் க்ஷணத்தில் முடியும்.

அடுத்த நிகழ்ச்சி, பகவான் அன்னையை முதன்முறையாக அவர் கணவருடன் சந்தித்தார். அன்னை அப்பொழுது கீதையின் யோகத்தை முடித்தவர். கிருஷ்ணாவதார நிலையில் இருந்தார். இது **Overmind.** அன்னைக்கு அடுத்தகட்ட மௌனம் தேவை. அது சத்திய ஜீவிய மௌனம். அதற்காக அன்னை எந்தப் பயிற்சியையும் மேற்கொள்ள வேண்டாம். பகவானால் அதை



அன்னைக்குத் தர முடியும். பெறும் தகுதி போதும். அன்னைக்கு அத்தகுதியுண்டு. பகவான் ரிச்சர்டுடன் பேசிக் கொண்டிருக்கும் பொழுதே அன்னைக்கு அம்மௌனத்தைக் கொடுத்துவிட்டார். அன்னை தரையில் உட்கார்ந்திருந்தார். தலையில் ஏதோ நடப்பதை உணர்ந்து மகிழ்ந்தார். நன்றியுடன் ஏற்றுக் கொண்டார். மௌனம் நிலைத்தது. கடைசிவரை அவருட-னிருந்தது. பகவான் கொடுப்பதைப் பெற தகுதி தேவை-யில்லை. பெறும் விருப்பமிருந்தால் போதும். 'அன்னைக்கும் வேறொருவருக்கும்' அம்மௌனத்தைக் கொடுத்ததாகக் கூறுகிறார். ரிச்சர்ட் எனக் கூறவில்லை. அவர் மனம் சலனமிழந்து மௌனமாயிற்று. அவர் மனம் செயலை இழந்ததைத் தான் மடையனானதாகக் கருதி ஓலமிட்டார். மௌனம் விலகி மனம் மீண்டும் செயல்பட்டது. அந்த நாளில் தனக்குப் பொறுமையில்லை என பகவான் கூறுகிறார். ரிச்சர்ட் பேரறிஞர், புதுவையில் எலக்க்ஷனுக்காக வந்திருக்கிறார். தனக்குப் பொறுமை இருந்திருந்தால் மௌனத்தைப் பெறத் தகுதியற்றவருக்கும் மௌனத்தைத் தான் கொடுத்திருக்க முடியும் எனக் கருதும் பாணியில் பகவான் எழுதுகிறார். அது என்ன பொறுமை? அது மனத்தைக் கடந்த ஆத்மா. ஆத்மாவைக் கடந்த சத்திய ஜீவியப் பொறுமை. அது க்ஷணத்தில் செயல்படும்.

(தொடரும்)

ஸ்ரீ அரவிந்த சுடர்

மலையும் கடலும் ஆத்மாவுக்குரியது.

மலை வலிமை தரும். கடல் தேஜஸ் தரும்.

**மலையும் கடலும் இணைந்த ஆத்மா பகவான் ஸ்ரீ அரவிந்தர்.**

# பாரதம் நமக்குக் கற்றுத் தரும் நுணுக்கமான உண்மைகள்

கர்மயோகி

வியாசர் எழுதியது *மகாபாரதம்*. இதிலில்லாதது உலகி-லில்லை. கிருஷ்ணாவதாரம் செய்தது சிஷ்ய பரிபாலனம். *அதை நிறைவேற்றியது துஷ்ட நிக்ரஹம்*. இது இதிகாசம். இந்நூல் நமக்குத் தருபவை நுணுக்கமான உண்மைகள். அதில் முதலானது முதன்மையானது. *கிருஷ்ணன் செய்ததை நாம் செய்ய முடியாது. சொல்லியதைச் செய்ய வேண்டும்*. இதன் நடைமுறை வீட்டில் நாம் செய்வது குடும்பம். பாரதம் படித்தால் கலகம் வரும். *படித்தால் கலகத்தை எழுப்பக்கூடிய நூல் உலகில் உள்ள அனைத்தையும் உட்கொண்டது என்பது நுட்பம்*. உலகுக்குக் கட்டுப்பட்ட உத்தம புருஷனால் மனைவியின் கற்பைக் காப்பாற்ற முடியாது. அதைத் தெய்வம்தான் காப்பாற்றும் என்ற சூட்சுமத்தை நுணுக்கமாக உணர்த்தும் நூல் பாரதம். *பாரத யுத்தம் குருக்ஷேத்திரத்தில் வெற்றி பெற்றது. அது சூட்சுமமாக வெற்றி பெற்ற நேரம் திரௌபதி மானம் காப்பாற்றப்பட்ட சபை.* முனிவர் தந்த வரமான மந்திரத்தால் சூரியன் என்ற கடவுளுக்குப் பெற்ற பிள்ளையை கன்னியால் காப்பாற்ற முடியாது. உலகம் திருமணம் என்ற ஸ்தாபனத்தை ஏற்பது சூரியனை ஏற்பதைவிட முக்கியம் என்பது பேருண்மை. சூரிய புத்திரனும் தேரோட்டி புத்திரனானால் உலகம் ஏற்காது, தாயாரும் ஏற்க மாட்டாள், *தர்மமும் அவனுக்குக் கை கொடுக்காது*. பிறந்தவுடன் கழுதையாகக் கத்திய துரியோதனன் தீமையின் திருவுருவம். இருளின் இன்றியமையாத தெய்வம். *அவனே ஆதரிப்பான், அந்தரங்க நண்பனாவான்*. உண்மைகள் பெரியவை. ஆத்மாவை உலகில் வெளிப்படுத்துபவை. ஆனால் அவை சூட்சுமமாகவே வெளிப்படும். அதை அறிய மனிதன் நுணுக்கம் பெற்றவனாக இருக்க வேண்டும். கற்புடைய மனைவி ஐவரைக் கலந்த தேவி. திரௌபதியை அம்மனாகக் கோயில் கட்டி மக்கள் வழிபடுவது போல் இராமனை, கிருஷ்ணனை, விநாயகரை, முருகனை வழிபடவில்லை. அவள் வழிபாடு காலை நெருப்பு சுடாமல் காப்பாற்றும். ஆச்சாரியர் அனைத்தும் அறிந்தவர்.



கர்ணனை ''வா, குந்தி புத்ரா'' என அவர் வரவேற்றபொழுது கர்ணன் ஆச்சரியப்பட்டான். *உலகம் அறியாத உண்மையை அறியவல்ல ஞானம் பெற்றவர் ஆச்சாரியர்.* அவருக்கும் அவமானம் உண்டு. பழி வாங்கும் மனப்பான்மையுண்டு. பழிவாங்க சபதம் செய்வார். செய்த சபதம் நிறைவேறும். அவமானப்படுத்திய நண்பனைக் கட்டி இழுத்து வர அவர் சிஷ்யனால் முடியும். *இத்தனையும் அவர் குழந்தைக்குப் பால் பெற்றுத் தராது*. ஞானம் செல்வம் ஈட்டாது என்பது சூட்சும ஞானம். அஸ்வத்தாமன் இறந்தான் என்ற பொய் செய்தியின் உண்மையை அறிய அவருடைய பெரிய ஞானம் போதாது என்பது உண்மை. மானத்தைக் காக்க பெண் அலறுகிறாள். 'பெண் பாவமன்றோ, பெண்களுடன் பிறந்தீர்' எனக் கேட்ட கற்புக்கரசியின் கற்பைக் காக்க முன்வர துரோணருடைய ஞானமும் பீஷ்மருடைய பிரம்மச்சரியமும் உதவாது என்ற உண்மையை பாரதம் நமக்குக் கற்றுத் தருகிறது. *தருமனால் முடியாததை, பீஷ்மர், துரோணரால் முடியாததை* இன்று அன்பனால் நிறைவேற்ற முடியும் என்பது அன்னை சூழல் நுணுக்கமாக நமக்குக் கூறுவது. ரிஷிகள் அதிதிகளாக வந்தபின் செய்வதறி-யாத திரௌபதி கிருஷ்ணனை அழைக்கிறாள். மாம்பழம் மரத்திலிருந்து விழுந்ததைக் கண்ட கிருஷ்ணன் ஆபத்தை உணர்ந்து அழைக்காமல் வருகிறான். *அன்னை செயல்படும் வகை வேறு*. எதிரி 10 ஆண்டிற்குப் பின் பொய் கேஸ் போடப்-போவதை முழுவதும் முறியடிக்க வாதியே அறியாத முக்கிய தஸ்தாவேஜை (**document**), அன்னை அனுமதியளித்ததை, எதிரி கைதவறி வாதிக்கு அனுப்பிய **file**-களில் வைத்து அனுப்பச் சொல்கிறார். வாதி கேட்பதை எதிர் வக்கீல் தன் பிராதில் எழுதிக் கேட்கிறார். ஜட்ஜ் அந்த டாக்குமெண்டை மனப்பாடம் செய்து கோர்ட்டில் 3 முறை கூறி ''இதுவே **Beauty Land**-இன் **constitution**'' என்றார். இது என்ன பாதுகாப்பு? இதை எந்தச் சூட்சுமம் எந்த நுணுக்கத்தால் அறிய முடியும். ஏக்கரில் அயன் நஞ்சை 400 ரூபாய் தரும் நாளில் புஞ்சை 1000 தரும் என்பதை அன்னை நிரூபித்தார். *அதன்பின் குடிசைத் தொழிலால் ஒரு ஏக்கர் 64,000 ரூபாய் 1970-இல் சம்பாதிக்க எதுவுமில்லாத-வருக்கு 200 ஏக்கர் நிலம் வாங்க பார்ட்னரை அன்னை அளித்தார்.*

மகாபாரதம், யுதிர்ஷ்டிரர், கிருஷ்ண பரமாத்மா, திரௌபதி, துரோணர் கூறும் உண்மைகள் உலகில் பெரியவை. இந்திய ஆன்மிகம் தவிர வேறெதுவும் அறியாத ஞானம், வாழ்வின் சூட்சுமமான நுணுக்கங்கள். நாம் இன்று நம் வாழ்வில் செய்யக் கூடியது என்ன?

அன்பர்கள் பாரதத்தைப் படித்தால் **Life Response**-ஐ பல கோணங்களில் அறியலாம். இரண்டாவதாக சூட்சும லோகம். சூட்சும ஞானம். சூட்சும சூசகங்களை அறியலாம். *முக்கியமாக அன்னை கூறியவற்றையும், அன்னை நம் வாழ்வில் செயல்பட்ட வகைகளையும் பூரணமாக அறிய, அவற்றின் சூட்சும நுணுக்கங்களை முழுவதும் அறியலாம்.* பல ஆண்டுகளாக ஒரு பிரச்சனையிருக்கும். அது வியாதியாகவுமிருக்கும். அது **diabetics** எனக் கொள்வோம். அவரே அன்பரானால், ஏதோ ஒரு வகையில் மனம் வியாதியை ஏற்றுக் கொண்டதால் அது இருப்பதை அவர் அறியார். *திரௌபதியின் மாங்கனி கூறுவது:* மனம் ஏற்பதை அறிவதால் எவராலும் தீர்க்க முடியாத பிரச்சனை தீரும். மரத்திலிருந்து விழுந்த பழம் மீண்டும் மரத்தையடையும் என மனம் பார்த்தபிறகும் நம்பாது. **Diabetics** விஷயத்தில் மனம் நாலுபேர் நம்புவதையே நம்பும். ஒரு அமெரிக்கருக்கு **Diabetics** வந்தது. டாக்டரிடம் போனார். மருந்தாலும் குணப்படுத்தலாம். உணவாலும் குணப்படுத்தலாம் என்றார். வந்தவர் உணவை ஏற்றார். **Diabetics**-ஐப் பற்றி ஏராளமான புத்தகங்கள் வந்துள்ளன. **Sugar** 1300-க்கு வந்து மயக்கம் போட்டு கோமாவிலிருந்தவர் 3 மாதம் ஆஸ்பத்திரியிலிருந்து, வெளிவந்து, சொந்தமாக பல்வேறு பரிசோதனை செய்து வியாதி, மருந்தைவிட உணவால்தான் நிரந்தரமாகக் குணமானதைப் புத்தகமாக எழுதியுள்ளார். இந்த அமெரிக்கர் அந்த புத்தகத்தைப் படித்தார். பயின்றார். **Diabetics** குணமாயிற்று. சொந்தமாக சோதனைகள் செய்தார். பூரண குணம் பெற்றார். இன்று 15 வருஷமாக சுகமாக இருக்கிறார். *இதுபோன்ற நூல்களைப் பயில்வதாலும், உணவே குணப்படுத்தும் என்று அறிவதாலும்*, ஆயுர்வேதம் சித்த முறைகளை அறிவதால் மனம் பெற்ற நம்பிக்கை ஆட்டம் காணும். மனம் அசைந்து கொடுத்தால் 3 நாள் பிரார்த்தனை



குணப்படுத்தும். இந்த விதிக்கு விலக்கு: *தெரிந்தோ, தெரியாமலோ நெருங்கியவர் வியாதியைப் பிரியத்தால் ஏற்றவர்க்கு இந்த முறையோ, எந்த முறையோ பலிக்காது.* அவர்கட்கு மருந்து அவசியம். அவருக்கும் பகவானிடம் வழியில்லாமலில்லை. அது கடினம். பொறுப்பற்றவருடைய பொறுப்பை ஏற்பது அறிவீனம். *உயர்ந்த பக்தியில் அதை ஏற்பது ''தன்னால் முடியாததை ஏற்பதாகும்.''* எதுவும் முடியும் என்றாலும் அதற்குரிய முறையால் முடியும். முறையை அடமாக விலக்குபவர் பிரச்சனையை அடுத்தவர் ஏற்பது சரியில்லை.

அவரவர் பிரச்சனையை அவரவரே தீர்க்க வேண்டும் என்பது சரி. அதை மீறி, பிரியத்தால் ஒருவர் அடுத்தவருக்காக ஆயிரம் செய்ய முடியும். அது பிரியம், பாசம், பரோபகாரம். அதற்கும் எல்லையுண்டு. ஒருவருக்காக அடுத்தவர் படிக்க முடியாது, சாப்பிட முடியாது, மருந்து சாப்பிட முடியாது, — **exercise** செய்ய முடியாது, மேற்சொன்னது இத்தலைப்பில் வருவதாகும். *இதற்கும் வழியில்லாமலில்லை என்றேன்.* அவர் மீதுள்ள பாசத்திலிருந்து விலகிச் செய்யும் சமர்ப்பணம் அவர் மனம் மாறி, நிலைமை மாறி தானே மருந்து சாப்பிட, — **exercise** செய்ய, சாப்பிட, படிக்க ஆரம்பிப்பார். இது மலையைப் புரட்டுவது. நெடுநாளாக இதற்கு நான் கூறும் உதாரணம் ஒன்றுண்டு. நாம் சென்னையிலும் அண்ணன் அமெரிக்காவிலுமிருந்தால் அவர் பாஸ்போர்ட்டைப் புதுப்பிக்க அவர் அதை அனுப்பாமலிருந்தால் நாம் போய் அதை வாங்கி வரலாம். இது முடியும் என்றாலும் அர்த்தமற்ற வேலை, செய்வது சரியில்லை. ஒரு முறை செய்தால் பல முறையும் அதையே செய்ய முடியாது. உரித்த வாழைப்பழ சோம்பேறிக் கதை உற்பத்தியானது அப்படியே. அரசியல்வாதி தன் மகன் **B.L.** பரிட்சைக்குப் படிக்கவில்லையென கேள்விப்பேப்பரை வாங்கிக் கொடுத்தார்! அவன் பெயிலானான்! தகப்பனார் கேட்டதற்கு மகன் ''நான் கேள்விப் பேப்பரை என்ன செய்ய, விடையெழுதிய பேப்பர் அவர் எனக்குத் தரவில்லையே'' என்றான். இவை போகாத ஊருக்கு வழி கேட்பதாகும். விதிவிலக்கை நாமும் விலக்குவோம்.

**பாரதம் சூட்சுமம், நுணுக்கம்**

எது சூட்சுமம், எந்த நுணுக்கத்தால் நாம் அதையறியலாம்? கர்ணன், குந்தி புத்திரன் என்பதை எவரும் கூறாமல் அறியும் ஞானம் உள்ள ஆச்சாரியருக்கு 1) குழந்தைக்குப் பால் பெறும் திறனில்லை, 2) அஸ்வத்தாமன் உயிரோடிருக்கும்பொழுது அவன் இறந்தான் எனக் கேட்ட சொல் பொய்யெனத் தெரியவில்லை.

முதலில் கூறியது செல்வத்தின் சூட்சுமம். இரண்டாவது கூறியது *ஞானம் முழுமையுடையதல்ல என்பது*. துருபதனை ஆச்சாரியர் சிஷ்யன் தோற்கடித்து கட்டிப்போட்டு அவர் காலடியில் போட்டது வில்வித்தை கொடுத்த பவர். எதிரியை வெல்லும் திறமை. செல்வம் சமூகத்திற்குரிய பவர். எதிரியை வெல்வது தனிப்பட்ட சாமர்த்தியம். பணம் சம்பாதிப்பது தனிப்பட்டதல்ல. ஒருவர் செல்வத்தை உற்பத்தி செய்ய முடியாது. ஒருவரால் நெல் பயிரிட முடியும். மாம்பழம் பயிரிடலாம். பலரும் இணைந்து ஒருவரை ஒருவர் சூட்சுமமாக நம்பி அதன் சிம்பலாக எழுவது பணம். பலராலும் உற்பத்தி செய்யப்பட்ட பணம் தனிப்பட்டவர் கற்ற வித்தைக்குக் கட்டுப்படாது என்பது சூட்சுமம். *ஆச்சாரியருடைய வித்தை கர்மத்திற்குக் கட்டுப்பட்டதால் அஸ்வத்தாமன் செய்தி புலப்படாது*. அன்னை கர்மத்தைக் கட்டுப்படுத்துவார். செல்வம் ஈட்டுவார்.

*இலக்கிய நயம் ஈடுபாட்டுடன் பயில்பவர்க்கே தெரியும்*. ஓட்டமும் நடையுமாகப் படிப்பவர் கண்ணில் படாது. நாம் கருதுபவை ஆன்மிக சூட்சுமங்கள். பாரதம் கூறும் எந்த நிகழ்ச்சியிலும் அந்நுணுக்கங்கள் இல்லாமலில்லை. *அதிகபட்ச முக்கியத்துவம் உள்ளவை பிருந்தாவனம். உலகில் இந்தியாவில் தவிர எங்கும் ஆன்மிகம் வளரவில்லை*. உலகம் முழுவதும் பரவிய மதங்கள் ஆன்மிக அடிப்படையில் பரவியவையல்ல. ஒரு மகானுடைய ஆன்ம விழிப்பை உலகம் ஏற்பதால் வளர்ந்தது மத வழிபாடு. இந்தியாவில் மதவழிபாடும், குடும்ப வாழ்வும், அரசியலும் பொது வாழ்வும் ஆன்மிக அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்டவை. ஆசிரமங்களில் வாழ்ந்த ரிஷிகள் உலக வாழ்வுக்கு வழிகாட்டியானார்கள். அதன் நுணுக்கங்கள்



முழுவதும் பாரதத்திலுள்ளன. பொதுவாக நாம் அதையறி-வோம். குறிப்பாக அறிய ஞானம் வேண்டும். பகவான் ஸ்ரீ அரவிந்தர் அவதரித்தபின் ஆன்மிகம் பரிணாம வளர்ச்சி பெற்று சத்திய ஜீவியமாகும் காலம் பிறந்தது. அது *புது ஆன்மிக யுகம்*. அவருக்கு முதல் சித்தி ஜெயிலிலும் அடுத்தது புதுவையிலும் கிடைத்தது. 1956-இல் அவர் இலட்சியம் புவியில் பூர்த்தியாகி விட்டது.

*அன்னை வாழ்வின் பல ஆயிரம் நிகழ்ச்சிகளை நாம் அறிவோம்*. அவர் கோட்பாடுகள் அனைத்தையும் நாமறிவோம். பாரதத்தின் சூட்சுமங்களை அறியாதவர் அன்னையை அறிவதால் அதன் மூலம் தெளிவாக அறியலாம்.

13 நாட்களில் 13 ஆண்டுகள் முடிந்ததை பரமாத்மா கூறியபொழுது தர்மபுத்திரரால் அதை ஏற்க முடியவில்லை. *அதன் சூட்சுமம்:* காலம் நிலையானதல்ல. *காலம் மனிதன் நிர்ணயிப்பது*. யுதிர்ஷ்டிரர் ஏற்காததால், 13 ஆண்டுகள் வனவாச-மிருக்க வேண்டி வந்தது. ஏற்காத மனிதருண்டு. சூட்சுமத்தை-யறியாதவருண்டு. அருளை ஏற்காதவருண்டு. பாரதம் சூட்சுமத்தைக் காட்டும், ஊட்டாது. அன்னையின் சூட்சுமத்தை அறியாதவர், ஏற்காதவரை அன்னை கைவிடுவதில்லை. *சூழலை மாற்றி அவரறியும்படி செய்வார். பிறர் மூலம் அந்த அனுபவத்தைத் தருவார்*. அப்படி மனம் மாறி ஏற்றவரை அருள் ஏற்கும். அருள் பேரருளாகப் பலிக்கும். பொய்யில் ஊறி அருளை அடமாக மறுத்தால் அருள் செயல்பட்டு பலித்தபின் இருளை ஏற்று நடந்தால் அருள் பலிக்காது, ஆனால் விலகாது. தடை விலகியவுடன் பலிக்கும். பலிக்கத் தவறாது. *அருள் அடுத்தத் தலைமுறைவரை காத்திருக்கும். அதன் பிறகும் பலிக்கும்*. தர்மபுத்திரர் மறுத்ததால் விலகிய அருள் மீண்டும் அவர் வாழ்வில் வந்து பலிக்கவில்லை. ஒரே முறை தரிசனம் செய்தவர் அந்த ஆண்டில் அவர் சம்பளம் போல 10 மடங்கு சம்பாதித்தபின் குதர்க்கமாக இருளை நாடி அழிந்தார். அவர் அழிந்தபின் அவர் தரிசனம் பெற்ற அருள் அடுத்த தலைமுறை-யில் 1000 மடங்கு பலித்தது. இது பாரதம் அன்பர்க்குக் கூறுவது.

திரௌபதி சுயம்வரத்தில் ஜராசந்தன் மணப்பெண்ணை கடத்திச் செல்லக் காத்திருந்த செய்தி பரமாத்மாவுக்கு வந்தது. அவனுக்கு எச்சரிக்கை செய்ய விரும்பினார். போனவர் தன் ஆயுதங்களை அவன் பாசறைக்கு வெளியே வைத்துவிட்டுப் போனார். *எதிரியை எதிர்கொள்ளும்பொழுது தன் வலிமையை நம்பாமல் செயல்படுவது அன்னை சக்தி செயல்பட உதவும்.* பாரதத்தில் அதைப் பரமாத்மா மட்டும் செய்யலாம். எல்லோரும் செய்ய முடியாது. சட்டம் உண்டு. அந்த நாளில் அது பலிக்க ஒருவர் பரமாத்மாவாக இருக்க வேண்டும். *அன்னை பக்தர்கள் அனைவருக்கும் அந்தச் சட்டம் செல்லும்.* பிரபஞ்சத்தில் உள்ள தெய்வீக சக்திகளைப் பாரதம் சுட்டிக்காட்டுகிறது. அது போல் பாரதம் காட்டத் தவறிய பவர், சட்டம், சூட்சுமமில்லை. அன்னை அதுபோன்ற அனைத்தையும் அன்பர்கள் வாழ்வில் செயல்படச் செய்கிறார். பிரார்த்தனையாலும் அதை அன்பர்கள் பெறலாம். *பிரார்த்திக்காதவருக்கும் சூழலாய், நாட்டின் சட்டமாக, புது வாழ்வின் பொலிவாக அவை எழுந்து தானே செயல்படும்.* யுத்தத்திற்கு நரபலி வேண்டும் என்பது பிரபஞ்ச சட்டம். பாரதப் போருக்கு அரவான் பலியிடப்பட்டான். சட்டம் உண்டு, காலம் மாறினால், அருள் உலகில் செயல்பட்டால், அன்னையே அவதாரமாக இருந்து காரியங்களை நடத்தினால், நரபலி தவிர்க்கப்படும். அதையும் செய்தபின் வைதிகர் நேரத்தை மாற்றியமைத்ததால் ஆசிரம வாயிலில் ஓர் சாதகர் ஆகஸ்ட் 15, 1947 அன்று கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார்.

*தெய்வமானாலும், மனிதப் பிறவி எடுத்தபின் மனிதச் சட்டத்திற்கு உட்பட வேண்டும் என்பது உண்மை.* சூரிய புத்திரனும் தேரோட்டி மகனாகவே நடத்தப்படுவான் என்பது கர்ணன் வாழ்வு கூறுவது. அன்னை சூழலின் மகிமையை ஆழ்ந்து பூரணமாக உணர்ந்தவர்கள், பாரதம் கூறும் உண்மையிலிருந்து இரு விஷயங்களை அறியலாம். 1) கர்மத்தை மீற முடியாதது போல் காலத்தின் - சமூகத்தின் - சட்டத்தை மீற மனிதனால் முடியாது, 2) *வாழ்வின் கடுமையை காலம் பாரதத்தில் காட்டுவதை நன்குணர்ந்தவர் அதை மீறும் சக்தியையுடைய அன்னை அருளின் மகிமையை அறியலாம்.* **Prince and the Pauper**-இல் ‘‘உடை என்ன செய்யும், உள்ளதே முக்கியம்’’ எனக் கூறி அரண்மனையை விட்டு வெளியேறிய இராஜகுமாரன் *உடை மட்டுமே முக்கியம் எனக் கண்டான்.* பன்றியை அவன் திருடவில்லை. அதற்காக அவன் தூக்கு தண்டனையை எதிர்நோக்கினான். ஓராண்டு சிறைவாசம் கிடைத்தது. ஜெயிலுக்கும் பிறகு போனான். சாட்டையடியும் வழங்கப்பட்டது. இராஜகுமாரன் என்பது அரண்மனையில் உண்மை. வெளியில் திருடனின் மகன் என்பது மட்டுமே உண்மை என ஒரு 10 அல்லது 15 நாட்களில் எட்வர்ட் புரிந்து கொண்டான். அரச வாழ்வை விட்டு எளிதில் வெளியேறலாம். மீண்டும் உள்ளே வர முடியாது என்பது உண்மை. *காலம், கர்மம், சமூகம் ஒரு கட்டுக்கோப்பு. அதனுள் உள்ளவரைதான் அதன் பாதுகாப்புண்டு. வெளியில் வந்தால் அது இல்லை.* மனித வாழ்வுக்குப் புறத்தோற்றம் மட்டுமே முக்கியம் என்பது கர்ணன் வாழ்வில் வெளிப்படுவது பேருண்மையானாலும் அன்னை ஒளி அக்கட்டுக்கோப்பை விட்டு ஒருவரை வெளியில் எடுத்து அவருக்கே உரியதை - அன்னை அவருக்குக் கொடுத்ததை - அனுபவிக்க உதவும். விதுரன் விவேகத்திற்குப் பேர் போனவன். வியாசருக்குப் பிறந்தவன். அவர் விவேகமும், வியாசர் ஆன்மிகமும் ‘‘வாழ்வில்’’ செல்லாது. தர்மம், சத்தியம், நியாயத்தைக் காக்கும் நேரம் வந்தால் அவர் உள்ள இடமே பேசும். மற்றவை அனைத்தும் வெறும் பேச்சு. பீஷ்மர் பிதாமகன். பிரம்மச்சாரி. *பிரம்மத்தை வணங்குபவன் பிரம்மச்சாரி.* அது ஆன்மிக உண்மை. வாழ்வில் திருமணமாகாதவனை ‘‘பிரம்மச்சாரி’’ என்பர். பீஷ்மர் வாழ்வு தூய்மையானதே, ஆனால் அவரது பிரம்மச்சரியம் அவர் மனம் ஏற்றதல்ல. அவரே விரும்பி ஏற்ற விரதமல்ல. *சூழ்நிலையின் நிர்ப்பந்தத்தால் மனத்தைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்.* வலியச் செய்யும் கட்டுப்பாடு வன்முறையாகும் என்பது ஆன்மிகச் சட்டம். கட்டுப்பாடு கடுமையானால் பாதாளத்தில் எழும் வன்முறையும் கடுமையாகும் என்பது வாழ்வையும், தவத்தையும் கடந்த ஆன்மிக உண்மை. அவ்வுண்மையின் புற உருவம் அம்புப்-படுக்கை. உடல் பெற்ற வேதனை. உடலின்பம் உயிருக்குரியது இயல்பு. குடும்பஸ்தன் அனுபவிப்பது. தபஸ்வி தன் தபோ-பலத்தால் உடல் நாடும் இன்பத்தை ஆன்மா அறியும்

இன்பமாகமாற்றுகிறான். பீஷ்மர்தவத்தைமேற்கொள்ளவில்லை. மறுத்த சுபாவத்தை மாற்ற முயலவில்லை. தகப்பனாருக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் விரதத்தை மேற்கொண்டார். *சுபாவத்தின் தன்மை விரதத்தின் சக்தியை மீறக்கூடியது என்ற அடிப்படை உண்மை அவருக்கு அம்புப்படுக்கையில் உடல் வேதனையைக் கொடுத்தது*. இயற்கை நியதிகளை ஓரளவு மீறலாம், மீறுவதற்கு முறையுண்டு. பீஷ்மர் அம்முறையை ஏற்கவில்லை. நியதியை மீற முயன்றார். புறவாழ்வில் புனிதன் என்று பெயர் வந்தது. ஆனால் திரௌபதியைக் காக்கும் திறன் பெறவில்லை. பரமாத்மாவின் தூதை ஏற்கும்படி துரியோதனனுக்குக் கூற முடியவில்லை. ''செஞ்சோற்றுக் கடன்'' என தன் நிலைமையை அறிந்தார். ''சோறு'' என்பது செல்வம் தருவது. ஆன்மிகம், விரதம், பிரம்மச்சரியம், சபதம், தூய்மை ஆகிய அனைத்தையும் செல்வம் மீறியது. *ஆன்மிக வாழ்வின் அடிப்படைக்குச் செல்வம் முக்கியம் என பகவான் கூறுவதன் பொருளை இதன் மூலம் பாரதம் எடுத்துக்காட்டுகிறது*. முழுமை எழும்பொழுது பகுதியானாலும் அதன் குறை தன்னை வலியுறுத்தும். இதுவரை எழாத ''குறை'' முழுமையை நாடும்பொழுது எழுந்து குரல் கொடுத்து ''நானிருக்கிறேன், என்னைப் புறக்கணிக்க முடியாது'' எனக் கூறுகிறது.

12 ஆண்டு வனவாசம் முடிந்தபின் ஓராண்டு அஞ்ஞாத வாசம் உண்டு. *இதன் முக்கியத்துவம் உலகம் அறியும்*. ஆன்மிக உண்மை பேருண்மையைக் கடந்த பெரிய சத்தியம். நாளடைவில் அது படிப்படியாக இறங்கி வரும், மாறும், உருமாறும், திருவுருமாற்றமும் பெறும் போலும். தமிழ்ப் பண்பில் பெண் வீரனை விரும்பி மணப்பாள். வீரன் என்பவன் போரில் எதிரியை வெல்பவன். புறமுதுகு காட்டாதவன். *உயிரைவிட வீரத்தை முக்கியமாகக் கருதுபவன்*. வீரன், சூரன், தீரன் என்பவர்கள் உலக வாழ்வு உயிரைக் காப்பாற்றும் வாழ்வாக இருந்த நாளில் ஊருக்கு முக்கியமானவர்கள். சிறுபடையைத் தலைமை தாங்கி பெரும்படையைத் தாக்க முனைவது போர்க்களத் தர்மப்படி அறிவீனம். பெரும் வீரனான சர்ச்சில் அதுபோன்ற நேரம் சரணடைவது அறிவுடைமை என முன்னோர்களைச் சான்று கூறிப் பேசுகிறார். *வீரம் எழுந்தால்*



*அது போர் தேஜஸ் பெற்றதாகும்*. இராமபிரான் விபீஷணனை நோக்கி ''தேஜோமயமாய் எதிரில் நிற்பவன் யார்?'' எனக் கேட்டபொழுது அவனே இராவணன் என அறிந்தார். தேஜஸ் அறிவுச்சுடர். *தைரியம் செயல்படும்முன் வேள்வித்தீயாக எழும்*. அது தலைவனுக்கு மட்டும் உதவும் சுடரானால் அவன் சிறந்த போர் வீரனாகலாம். அவனைச் சுற்றியுள்ள 10 அல்லது 100 பேரை அச்சுடர் சூழுமானால் அவனுடைய வீரத்தால் அத்தனை பேரும் போரிடுவார்கள். ஜார்ஜ் வாஷிங்டன் கூறுவது, ''வீரர்கட்குச் சாப்பாடு, துணி, செருப்பைவிட முக்கியம் போரில் வெற்றி''. *ஒருவர் வீரம் எதிரில் உள்ள 10 அல்லது 15 பேரை மிரண்டு ஓடச்சொல்லும்*. வீரனுடைய வீரம் எதிரியின் நெஞ்சில் பயத்தை எழுப்பும். நெப்போலியன் போர்க்களத்தில் வீரர்களை உற்சாகப்படுத்தினால் அப்படை ஊரையே வெல்லும், உலகத்தையே வெல்லும். இந்திய சேனைகள் சேனைத் தலைவர் மீதுள்ள பாசத்தால் போரிடுபவை. ஆங்கிலேய வீரர்கள் இராணுவ சட்டம் அறிந்தவர், அதன் திட்டப்படி செயல்படுபவர்கள். தலைவர் - **General** - இறந்தாலும், இராணுவம் கலையாது. இந்தியப்படை தலைவர் இறந்தால் கரைந்து மறையும். சர்ச்சில் வீரம் இங்கிலாந்து மக்களையே தட்டி எழுப்பியது. *போர்க்களம் அன்றாட வாழ்விலும் உண்டு*. எளியவன் பெரிய காரியம் செய்யும் நேரம் உண்டு. எல்லோரும் அறிந்த காரியத்தை ஒருவர் செய்தால் அது எவர் கண்ணிலும் படாது. வழக்கு செல்லும். வழக்கத்திற்கு மாறானது அனைவர் கண்ணிலும் படும். நாட்டில் அஞ்ஞாத வாசம் என்ற பெரு நெறி கண் திருஷ்டி என வழங்குகிறது. எவர் கண்ணிலும் படாமல் நடப்பதே நடக்கும். ஒருவர் கண்ணில் பட்டாலும் உயிர் போகும். கண் என்பது பார்வையல்ல. எண்ணம் தீண்டுவது கண்படுவது. எண்ணமெல்லாம் கெட்ட எண்ணம். *நம் செயல் மீது நம் எண்ணம் பட்டாலும் - தீண்டினாலும் - அது தவறு*. காரியம் கெடுவதைக் காணலாம். ''எனக்கே பொறுக்கவில்லை'' என்கிறோம். இது பிரபஞ்ச சட்டம். விலக்கேயில்லாத விதி. இதன் ரூபங்கள் ஆயிரம். நம்மவர்கட்கு எல்லா ரூபங்களும் தெரியும். குறிப்பாக அவற்றின் தவறான அம்சம் தெரியும். சிறு குழந்தைக்குத்

திருஷ்டிப்பொட்டு முதல் புதிய கட்டடத்திற்குக் கட்டும் பூசணிக்காய் வரை உள்ள அம்சங்கள் ஆயிரம். இதன் நல்ல அம்சம், உயர்ந்த அம்சம் அறிந்து செயல்பட வேண்டுமானால், அதுபோன்ற பெருங்காரியங்களில் ஈடுபட்டவர் சாதிக்க வேண்டுமானால் இந்த அஞ்ஞாதவாசத்தின் விபரங்கள் ஒவ்வொன்றும் ஒரு கதை சொல்லும். *இதை நன்கு அறிந்தவர் உலகில் சாதிக்க முடியாதது இல்லை.*

காலம், கர்மம், சமூகம், ஊர், பலர் திருஷ்டியின் எல்லா அம்சங்களும் பாரதத்தில் ஏராளமாக வருகிறது. துர்வாசர் முனிவர். பரமாத்மா தெய்வம். முனிவரைக் கடந்த ரிஷி, யோகியைக் கடந்த நிலை தெய்வ நிலை. *கிருஷ்ண பரமாத்மாவுக்கு துர்வாசர் வரம் கொடுத்தார். ''உன் உடலில் எங்கும் காயம் படாது என்றார்.''* பிரதமர் பதவியேற்கப் போகும்பொழுதும் ஒரு டிரைவர் காரை ஓட்ட வேண்டும். பரமாத்மாவுக்கும் வரம் தரும் திறன் முனிவருக்குண்டு, பிரதமர் பாண்டி வந்தபொழுது வழக்கமான கவர்னர் டிரைவரை விட்டு நல்ல டிரைவர் ஒருவரை ஓட்டச் சொன்னார்கள். கார் டிரைவர் வரும் காலத்தில் முதன் மந்திரியானார். கார் டிரைவரானாலும், பிரதமருக்குச் செய்யும் சர்வீஸ் *பவித்திரமான பக்குவம் உடையதானால்* (Perfection) *சிறப்பு பெறுவதால் தொழிலின் சிறப்பு நிலைக்கு சிறப்பளிக்கும்.* இது வாழ்வின் சட்டம். பாரதம் முழுவதும் உலகிலுள்ள எல்லா வாழ்வின் சட்டங்களையும் கூறுவது. 'நாள் செய்வதை நல்லவர் செய்ய மாட்டார்'. Virgin Moment என்பது பகவான் சொல்.வெறும் நாளை 'நாளா'க்குவது பவித்திரம், பக்குவம், சிறப்பு. சகாதேவன் துரியோதனனுக்கு அவன் வெற்றி பெறும் நாளைக் குறித்துக் கொடுத்தான். இது பெருந்தன்மை. எதிரிக்கும் சாஸ்த்திரம் சரியாகச் சொல்லப்பட வேண்டும் என்பது சாஸ்த்திரம். நிலைமை மீறி விட்டது. பரமாத்மா செயல்பட்டார். நிலைமை மாறியது. சாஸ்த்திரம் சாஸ்திரோத்தமாகப் பின்பற்றப்பட வேண்டும் எனில் சமயத்தில் அது நாமறியவும் உதவும். இது காலத்தின் குணம். இதைக் காலத்துள் வாழ்பவர் எவரும் அவருடைய பெரும் திறமை-யாலும் எதுவும் செய்ய முடியாது. காலம் காரியத்தை மீறிப்போனால் தெய்வம் துணைசெய்தாலன்றி வழியில்லை.



அன்பர்கட்கு அத்தெய்வமாக அன்னை அருள் சூழலில் காத்திருக்கிறது. *பாரதத்தில் இதுபோன்ற எல்லா கட்டங்களும் ஆபத்தை விலக்கத் தேவைப்படுகிறது.* அன்பன் ஆபத்தை அறியான். தேடிப் போனால் ஆபத்துண்டு. அன்பனுக்கு இதே போல் அருள் செயல்படும் நேரம் எல்லாம் அற்புதமான நேரம். அதிகபட்ச வாய்ப்பை சாதிக்கும் நேரம். பிரதமரிடம் சந்தித்துப் பேச முடியாத மனிதனை அருள் பிரதமரை நியமிக்கும் நிலைக்கு உயர்த்தும் வாய்ப்பு அது. ஊர் ஒருவனுக்கு எதிரியானால் அவன் அழிவான். அவன் ஏழையானால் அவதிப்பட்டு அழிவான். வாழ்வில் values பண்புகள் உண்டு. அவை சான்றோருக்குரியவை. அவற்றை ஏற்பவர் சான்றோராவார். *சான்றோர் மனதாலும், கனவிலும், கற்பனையிலும் குறையறியாதவர்.* Dr. தார்ன் என்பவருடைய நிலை அது போன்றது. £150 சம்பாதிக்கும் டாக்டர் அவர். அவரிடம் £3,00,000 சொத்தை டிரஸ்டியாகக் கொடுத்து, ''அடுத்த நான்கு வருஷத்தில் உடையவன் இறந்து விட்டால் இந்தச் சொத்து உங்கள் அண்ணார் மகளுக்குடையது'' எனக் கூறியபின் அவன் பிழைக்க மனதார பிரம்மப்பிரயத்தனம் செய்தார். அவன் இறந்து விட்டான். எதிரியான ''ஊர்'' ஓராண்டாகச் செய்யும் அவல ஆர்ப்பாட்டம் தலைகீழே மாறி அழிக்க விரும்பிய பெண்ணை அழகு தெய்வமாக ஏற்றனர். பாரதம் கூறுவது ஒன்று இரண்டல்ல. ஓராயிரம்.

(முற்றும்)

## ஜீவிய மணி

*அன்பு (Divine Love) என்பது அழகான பழக்கம் மட்டும் அன்று. நல்ல சொல் மட்டும் அன்று. நம்மைப்போல் பிறரைக் கருதுவது மட்டும் அன்று. நம்மை மீறி எழுவது. அனைவரையும் அனைத்தையும் நாடுவது. பலன் எதிர்பாராதது. கொடுக்காமல் இருக்க முடியாது என்பது.*

# அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

### 7. நல்லது மட்டுமே நடக்கும்

அமெரிக்கர் ஒருவர் பாண்டிச்சேரி வந்திருந்தார். 56 வயதானவர். மனைவி, 3 வயதுவந்த குழந்தைகளை விட்டுவிட்டு வந்திருந்தார். அவருடைய வீட்டில் (telex) தந்தி வசதி இருந்தது. இங்கு வந்து தங்குமிடத்திலும் அதே வசதி-யிருந்ததால், தம் மனைவியிடம் வீட்டுச் செய்திகளை அடிக்கடி அனுப்பும்படிச் சொல்லி இருந்தார். வந்தவர் வந்த வேலையில் மூழ்கித் தம்மை மறந்திருந்தார். 7 நாட்களாக மனைவியிட-மிருந்து ஒரு செய்தியும் இல்லை. அதாவது அவர் வேலையைப் பற்றிய செய்திகள் அடிக்கடி வருகின்றன. வீட்டில் உள்ளவர்களைப் பற்றிய செய்திகள் ஒன்றுகூட இல்லை. 7-ஆம் நாள் அவர் மனம் உடைந்துவிட்டார். செய்தி நல்லதாக இருந்திருந்தால் என் மனைவி அனுப்பியிருப்பாள். நல்ல செய்தியில்லை என்பதால் அதை இங்கு அனுப்பி என் வேலையைக் கெடுக்கக்கூடாது என்று எண்ணி அனுப்பாம-லிருக்கிறாள் என்று தீர்க்கமான முடிவுக்கு வந்து கலங்க ஆரம்பித்தார். இப்படிப்பட்ட நேரங்களில் அன்னை என்ன ஆலோசனை கூறுகிறார் என்றறிய முயன்றபொழுது, 'நல்லது மட்டுமே நடக்கும்' என நினைத்து மற்ற எண்ணங்களை விலக்க வேண்டும் என அன்னை கூறியிருப்பது தெரியவந்தது. அவர் மனம் அதை ஏற்றுக்கொண்டது. உணர்ச்சி ஏற்றுக்-கொள்ள மறுத்தது. போராடி உணர்ச்சியைத் தம் கட்சியில் சேர்த்துக்கொண்டார். அது மனநிம்மதியைக் கொடுத்ததுடன், மன நிறைவையும் கொடுப்பதைக் கண்டு வியந்து, தன் வியப்பை விளக்கிக்கொண்டிருக்கும்போது வீட்டில் உள்ள தந்தி (telex) மெஷின் அடிக்க ஆரம்பித்து **'everyone here is in top form'** அனைவரும் இங்கு அற்புதமாக இருக்கிறார்கள் என்ற செய்தி வந்தது. இதுவே நல்லது மட்டும் நடக்கும் என்ற எண்ணத்திற்குள்ள பலம். நினைத்ததை நடத்திக் கொடுக்கும் திறம்.

அன்னையை வந்தடைந்தபின் நல்லது மட்டும் நடக்கும்; இல்லை என்பது இங்கில்லை; எது நடந்தாலும் அது பின்னர் நன்மையை மட்டுமே விளைவிக்கும் என்பதெல்லாம் உண்மை. எண்ணத்தின் திறத்தால் விளையும் நன்மை அவற்றிலிருந்து சிறிது வேறுபட்டுள்ளது. உதாரணமாக, புகழ் வாய்ந்த பள்ளியில் போய்ச் சேர்ந்தால் தானே பாஸ் வரும், பெயிலாக இங்கு வழியில்லை எனும்பொழுது, அது பள்ளியின் திறனைப் பற்றிப் பேசுவதாகும். மாணவன் சிறந்த முறையைக் கையாண்டு, அதனால் பெரும்பலன் பெறுவது மாணவனுடைய தனித்திறமையைக் காட்டும். அன்னையால் நல்லது மட்டுமே நடக்கும் என்பது அருளின் திறன். எண்ணத்தால் நல்லது மட்டுமே நடக்கும் என்று பக்தன் நம்புவதால் நடப்பது பக்தனுடைய உயர்வு. அன்னை அம்முறையை மிகச்சிலாக்-கியமானதொன்றாகக் கூறுகிறார். அப்படிப்பட்ட பக்தன் அன்னையின் அருளை ஏற்றுக் கொள்வது, சிறப்பான மாணவன் புகழ் வாய்ந்த கல்லூரியில் சேர்ந்து, சிலாக்கியமான முறையொன்றைத் தானே கடைப்பிடிப்பது போலாகும்.

நல்லது மட்டுமே நடக்கும் என்ற கருத்தை அன்னை அளவின்றி வற்புறுத்தியுள்ளார்கள். குப்புற விழுந்தாலும் அதுவும் அருளின் செயலே என்று நாம் உணர வேண்டும் என்று அன்னை அருளுக்கு விளக்கம் கொடுக்கும்பொழுது சொல்கிறார்கள். இக்கூற்றில் பொதிந்துள்ள உண்மை பெரியது. எனினும் ஒரு பெரிய ஆன்மிக உண்மையைச் சுட்டிக்காட்டும் கூற்றாக எடுத்துக்கொண்டபின் மட்டுமே இதன் பயனை நாம் அடைய முடியும். தர்க்கத்துக்குரிய கருத்தாக எடுத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்யலாம் என்றால், இக்கட்டுரையின் நிலை அதற்கு இடம் கொடுக்காது. தர்க்கத்திற்குரிய இடத்தில் தர்க்கரீதியாக அவ்வுண்மையை நிலைநாட்ட முடியும். அதைத் தவிர்த்து ஆன்மிகப் பேருண்மையைச் சுட்டிக்காட்டும்

கருத்தாகக் கொண்டு, அதை விளக்குவதற்குத் தேவையான லௌகீக உதாரணங்களையும், உணர்ச்சிபூர்வமான நிகழ்ச்சிகளையும், அறிவுபூர்வமான விளக்கங்களையும் மட்டும் கட்டுரையில் எழுதுகிறேன்.

இந்த நிகழ்ச்சிகள் இரு வகைகளாகும். ஒன்று பெரிய சிரமத்தை விலக்குவதற்கு ஏற்படும் சிறிய சிரமம். மற்றொன்று பிற்காலத்தில் பெரிய நல்லதைக் கொடுக்க இப்பொழுது ஏற்படும் பெரிய சிரமம்.

1965-இல் **(F.A.O.)** உலக உணவுக் கழகத்தினர் தம் வல்லுநர்களை அனுப்பி இந்திய உணவு நிலைமையைக் கணிக்கச் சொன்னார்கள். அடுத்த 5 ஆண்டில் 10 இலட்சம் பேர் பட்டினியால் இறப்பார்கள் என்ற ரிப்போர்ட் கொடுத்தார்கள். இந்திய அரசாங்கம் பீதியடைந்து இந்த நிலைமையைத் தவிர்க்க எதையும் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்து, ஆண்டுக்கு 100 கோடி பெறுமான கோதுமையை இறக்குமதி செய்ய வேண்டும், இந்திய விவசாயத்தைப் புதுப்பிக்க வேண்டும், என்று கங்கணம் கட்டிக்கொண்டு வேலை செய்ததால் பசுமைப் புரட்சி ஏற்பட்டு, உணவு உற்பத்தி பெருகி, அத்துறையில் இந்தியா உலகத்தின் தலைமைப் பதவியை அடைந்து, அந்த சாதனைக்காக உலகப் பரிசுகள் இரண்டையும் பெற்றது. 1965-இல் வந்த பஞ்சம், இந்தியாவின் எதிர்காலத்திற்கு நல்லதை விளைவித்தது.

டாக்டரிடம் சென்று டான்ஸில் இருக்கிறது என்று காண்பித்தால், சில சமயங்களில் அதை எடுக்கக்கூடாது; எடுத்தால் வேறு பெரிய கோளாறு வரும். உடலுக்குப் பெரிய கோளாற்றைத் தடுக்கும் திறன் உண்டு. அது கையாளும் உபாயங்களில் டான்ஸில் ஒன்று என்று சொல்வதுண்டு.

சண்டை, சச்சரவை எவரும் விரும்புவதில்லை. அதுவும் வீட்டிற்குள் அவை வந்தால் மனநிம்மதி போய்விடும். வயது முதிர்ந்த அனுபவசாலிகள் ஒருவர் வீட்டில், எல்லோரும் தனித்தனியே பிரிந்து போய்விட்டார்கள். தாய் தனி, தகப்பன்



தனி, அவரவர்கள் தனித்தனியே இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டால், அவர்கள் வீட்டில் எப்பொழுதுமே சண்டையிருந்ததில்லை. அதனால்தான் பிரிந்து விட்டார்கள்' என்று சொல்வது வழக்கம். பண்புள்ள குடும்பம் அன்பால் அரவணைக்கப்படுகிறது. பண்பு குறைவாக இருந்தால் சண்டையும், பூசலும் கிளம்பும். சச்சரவுகள் மூலம் மனத்திலுள்ளதைக் கொட்டித் தீர்த்துவிடுவார்கள். பிறகு ஒன்றாக வாழ்வார்கள். பண்பும் இல்லை, சண்டையும் இல்லை என்றால், கொட்டித் தீர்க்காத வெறுப்புகள் அவர்களைப் பிரித்துவிடும்.

கலைஞர்கள் இருவர். ஒருவர் திறமைசாலி ஆனால் புகழ் பெறவில்லை. மற்றவருடைய புகழ் அவருக்குப் பொறாமையைக் கொடுத்தது. அவரைக் கொலை செய்ய முயன்றார்; தவறியது. அந்த நிகழ்ச்சிக்கப்புறம் மற்றவருடைய புகழ் அதிகமாகி, அடுத்த துறைகளிலும் பரவி, மாநிலத்தினின்று நாடு முழுவதும் புகழ் பரப்பியது. வந்த பெருங்கேடு அபரிமிதமான வெற்றிக்கு வித்தாகி விட்டது.

ஒரு தெய்வ பக்தியுள்ள சாமானிய மனிதன். இவருடைய தூய்மையான பக்தி ஒரு பெரிய மடத்தில் முக்கிய பதவி வகிப்பவனுக்குக் கண் உறுத்தலாயிருந்தது. அவனோடு சாமானிய மனிதன் தொடர்புகொண்டதால் ஏற்பட்ட விளைவு, பெரிய மந்திரக்காரன் மூலம் இந்த எளியவனுடைய உயிரைப் போக்க அந்த மடத்து அதிகாரி ஏற்பாடு செய்தான். எளியவனுக்கு அது புரிய நாள் ஆயிற்று. புரிந்தபின் தன் பக்தியால் உயிரைக் காப்பாற்ற முடிவு செய்தான்; வெற்றி பெற்றான். எளிய பக்தி இந்நிகழ்ச்சியால் உயர்ந்த சித்தாக அவனுக்கு மாறியது. எந்த ஒரு கஷ்டமும் உயர்ந்த நிலைக்கு உன்னை உயர்த்த முயலும் பாதை என்பது பெரியோர் வாக்கு.

12 வயதில் கிழிந்த கால்சட்டையுடன் சென்னைக்கு ஓடி வந்த சிறுவன் பல கோடி சம்பாதித்தபின், தன்னூரில் தன்னுடன் இருந்த பிள்ளைகளைப் பார்க்கும்பொழுது, நானும்

அவர்களைப்போல் குமாஸ்தாவாக இல்லை என்பதற்கு ஒரே காரணம் அன்று வறுமை தாங்காமல் ஓடி வந்தேன் என்பதுதான் என்று தனக்குத் தானே விளக்கம் கொடுப்பது நமக்கு விளங்கும். **(social events)** வாழ்க்கையில் நடக்கும் பொது நிகழ்ச்சிகளில் பொதிந்துள்ள இந்த உண்மை எல்லோருக்கும் விளங்கும். தனிப்பட்டவருடைய வாழ்க்கையில் உத்தியோகத்தை இழந்தது, செல்வத்தை இழந்தது, பிறர் அறிய முடியாத கொடுமைகளை அனுபவித்தது போன்ற நிகழ்ச்சிகளால் அவருக்கு எதிர்காலத்தில் கிடைத்த பலன்களை மற்றவர்கள் அறிய முடியாது. ஆனால் அவருக்குத் தெளிவாகத் தெரியும்.

சிறு வயதில் மாற்றாந்தாய்க் கொடுமையை அனுபவித்த-வனிடம் அது அவனுக்கு நல்லதையே விளைவித்திருக்கும் என்று மற்றவர் சொல்ல முடியாது. அவனுக்கே பெரும்பாலும் தெரிய முடியாது. அதை நினைத்தாலே ஆத்திரம் வரும்பொழுது ஆராய்ச்சிக்கு இடமேது. அப்படிப்பட்ட ஒருவர் **A.G.S.** ஆபீஸில் குமாஸ்தாவாகச் சேர்ந்தார். தமக்கு மாற்றாந்தாய் இழைத்த கொடுமையை நினைந்து, அதனால் தமக்குக் குழந்தை பிறக்கக்கூடாது என்று அவர் பிரார்த்தனை செய்ததுண்டு. உயர்ந்த மனமுடையவராதலால் அதே மாற்றாந்தாய்க்கு அவர் எதிர்பாராதவிதமாக ஆயிரம் உதவி செய்து, பெரிய அன்பளிப்பையும் கொடுத்தார். புறச் செயலை மாற்றிக்கொண்ட பெருந்தன்மையிருந்தும், மனம் அந்தக் கொடுமைகளை மறக்கவில்லை. அவருடைய நண்பர்கள் பெரும்பாலோர் குமாஸ்தாவாகவும், சூப்பிரெண்டெண்டாகவும் ரிடையர் ஆனார்கள். இவர் **Deputy A.G.** பதவிக்கு உயர்ந்தார். சிறு வயதில் பட்ட கொடுமை, அதை மறக்க முயன்றதால் ஏற்பட்ட திறன், அவருடைய நிலையை உயர்த்தியது. இவைபோன்ற மறைபொருளாயுள்ள உண்மைகள் விவேகிகளுக்கே தெரியும். பிரச்சனைக்குரியவருக்கே சமயத்தில் தெரிவதில்லை.

**(Spiritual truths)** ஆன்மிக நிகழ்ச்சிகளின் பலன் அடுத்த பிறவியில் தெரியும். அன்னை பக்தர்களுக்கு அதுவும் உடனே தெரியும்படி நிகழ்ச்சிகள் நிகழும்.



ஒரு மாஜிஸ்ட்ரேட்டுக்கு வயதுவந்த பிள்ளைகள் 4 பேர்கள். அவர் மனைவி இறந்துவிட்டார். மாஜிஸ்ட்ரேட் **camp**-க்குப் போயிருக்கும் பொழுது பிள்ளைகள் அடித்துக்கொண்டனர். ஒருவன் மற்றவனைக் கடித்துவிட்டான். ஒருவாறாகச் சண்டை ஓய்ந்தது. மூன்றாம் பிள்ளை சொல்லாமல் ஓடிவிட்டான். சென்னைக்கு ஓர் உறவினர் வீட்டிற்குப் போய்த் தங்கினான். அவருடைய நண்பர் பெரிய அதிகாரி. பையனைப் பார்த்தார்; படிப்பை விசாரித்தார்; தம் பெண்ணைக் கொடுப்பதாகச் சொன்னார்; பையன் சம்மதித்தான். குடும்பத்தோடும், பையனுடனும் மாஜிஸ்ட்ரேட்டைச் சந்தித்து மணம் முடித்தார். சண்டை போட்டு, கடித்து, வீட்டை விட்டு ஓடியதன் முடிவு திருமணம்.

உத்தமமான குணம் உடையவருக்கு எல்லாக் கெட்ட பழக்கங்களும் இருந்து, அவர் பெற்ற பெருஞ்செல்வத்தை அழிக்க உதவியது. வாழ்க்கையில் எல்லையைத் தாண்டி பயங்கரத்தின் ராஜ்யத்திற்குள் அடி எடுத்து வைத்துவிட்டார். அவரது ஆன்மா விழிப்படைந்தது. ஆன்மாவின் தலைவனுக்கு அறைகூவல் அனுப்பியது. குரல் இறைவன் காதில் விழுந்தது. விழுந்த குரலை இறைவன் ஏற்றுக் கொண்டான். பயங்கரத்தி-லிருந்து திரும்பி வந்தார். ஒரு சிறிய சௌகரியம் ஏற்பட்டது; ஏற்றுக்கொண்டார். பல பெரிய சௌகரியங்களை இறைவன் அளித்தான்; ஏற்றுக்கொள்ள மறுத்தார். அவர் ஏற்றுக்கொள்ளக்-கூடிய வேறு சௌகரியங்களை அளித்தான்; ஏற்றுக்கொண்டார். இறை பணியை அளித்தான்; முழுவதும் ஏற்றுக் கொண்டார். அந்த இருளின் எல்லைக்குப் போகாமலிருந்தால், இன்று ஒளியின் சேவை கிடைத்திருக்காது என்று அவருக்குப் புரிய முடியாது. இவை ஆத்மீக உண்மை. பொதுவாக அடுத்த பிறவியில் பலிக்க வேண்டியது. அருள் இருந்ததால் இதே பிறவியில் பலித்தது.

ஆன்மிகக் கருத்து என்பதால் ஏற்றுக்கொள்ளலாம் என்று நினைத்தமாத்திரத்தில் மனம் ஆயிரம் கேள்விகளை எழுப்பும். ரூ.2,500 சம்பாதித்த கணவன் வேலையிழந்து வீட்டில் அயர்ந்து

உட்கார்ந்திருக்கிறார் எனும்பொழுது, மனைவியின் மனம், இது ஆன்மிக உண்மை. ஆகையால் இதை நான் ஏற்றுக்-கொள்கிறேன்' என்று சொல்ல முன்வருமா? கோபமும் எரிச்சலும்தான் வரும். இப்பொழுது யாராவது ஆன்மிகத்தைப் பற்றிப் பேசினால் ஆன்மிகத்தின் மீது கோபம் வரும். ஒரு பெண்மணி பெரியமனது செய்து அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டார். இதுவும் நல்லதே' என்று தமக்கே சொன்னார். 15-ஆம் நாள் ரூ.3000-த்தில் வேலை கிடைத்தது. புரட்சி செய்யும் மனம், ஆன்மிகக் கருத்தைப் புரிந்துகொள்ள வந்ததன் பலன் இது.

அபாரத் திறமையுடைய பாதிரியார் ஒருவர். ஒரு பள்ளிக்-கூடம் கட்ட மடத்தில் உதவி கேட்டார். மடம் மறுத்தது. உடன் அவரை கேலியும் செய்தது. முடிந்தால் மடத்தின் உதவி-யில்லாமல், நீயே பள்ளியைக் கட்டு என்று சவால்விட்டது. சவாலை ஏற்றுக்கொண்டார். 400 வருட சரித்திரத்தில் இல்லாத ஒரு காரியத்தைச் சாதித்தார். மடத்தின் உதவியில்லாமல் பெரிய பள்ளியைக் கட்டினார். அதன் விளைவாக அளவுகடந்த புகழ் அடைந்தார். புகழ் அடைந்தது 25 ஆண்டுகளுக்குப்பின். மடம் கேலி செய்யும் காலத்தில் 'இதுவும் எனக்கு நல்லதே' என்று தன் மனத்திற்கே தான் சொல்லக்கூடிய தைரியம் அசாதாரணம்.

உன் மைத்துனன் இறந்துவிட்டான் என்று தந்தி வந்தபின், இறந்தவரை போனில் கூப்பிட்டார் ஒருவர். 'இறந்தவர்' போனில் பேசினார். முடிந்துவிட்டதாக வாழ்க்கை அறிவிக்கும் செய்தியை ஏற்றுக்கொள்ள மறுக்கும் தைரியமும், மனத்-தெளிவும் இருந்தால், அது நிலைமையை மாற்றிவிடக்கூடிய திறனுடையது.

வருத்தப்படக்கூடிய செய்தி வந்தபின், நிகழ்ச்சி நடந்தபின், வருத்தப்படமாட்டேன் என்ற உறுதி அந்தச் செய்தியை மாற்றவல்லது. மனம் உறுதியானால் வாழ்க்கை அதற்குட்பட்டு வளைந்துகொடுக்கும்.



**Little Princess** 'இளம் இராஜகுமாரி' என்ற ஒரு ஆங்கிலக் கதையில், செல்வர் தன் மகளைப் பள்ளியில் சேர்க்கிறார். எல்லோரும் அவளைப் புகழ்கின்றனர். வைரச்சுரங்கத்தில் முதலிட்டு, ஏமாந்து, மாரடைப்பால் இறந்து, இராஜகுமாரியை வெறும் குமரியாக்கிவிட்டார் தகப்பனார். எல்லோரும் புகழ்ந்தபோது தானிழக்காத நிதானம் இன்றும் அவளுடன் நிலைத்து நின்றது. வறுமையின் வண்ணங்களைப் பூரணமாக அனுபவிக்கும்பொழுதும் நல்ல மனப்பாங்கை அவள் இழக்கவில்லை. தகப்பனுடைய பார்ட்னர் அவளைத் தேடி அலைந்து, உலகெங்கும் கிடைக்காத நிலையில், அடுத்த வீட்டில் கண்டுபிடித்து, நஷ்டமான சுரங்கம் மேலும் தோண்டிய நிலையில் அதிக லாபத்தைக் கொடுத்ததாகவும், அதற்கு அவளே வாரிசு எனவும் அறிவித்தார்.

வாழ்க்கை வளத்தை உற்பத்தி செய்வது மன வளம். வற்றாத மன வளம் வாழ்க்கையின் வளத்தை மீண்டும் அவளுக்குக் கொண்டு வந்து கொடுத்தது.

புற நிகழ்ச்சி எதுவானாலும் அகவுணர்வு நல்லது மட்டுமே நடக்கும் என்று அகமகிழ்ந்து சொல்லுமானால், அளவிறந்த நன்மையை அவ்வுணர்வு ஏற்படுத்தக்கூடியது. அத்தகைய சிறப்பு மனித உள்ளத்திருந்தால் அன்னை அங்கு அமுதத்தைச் சுரக்கச்செய்வார்.

எந்த ஒரு நிகழ்ச்சியோ, செய்தியோ நம்மைத் தேடி வரும் பொழுது, 'இது நல்ல செய்தியாக மட்டுமே இருக்கும்' என உண்மையாக மனத்தளவில் நம்புபவர்கட்கு நல்ல செய்திகள் மட்டுமே வருவதை நான் பார்த்திருக்கின்றேன்.

இளவயதில் கொடுமைக்காளானவர்கள், பள்ளியில் எல்லாப் பிள்ளைகளாலும் கேலி செய்யப்பட்டவர்கள், குடும்பத்தின-ராலேயே வெறுத்து ஒதுக்கப்பட்டவர்கள், உரிய பதவி உயர்வு மறுக்கப்பட்டவர்கள், அறிவின் திறத்தை அறிந்து புறக்கணிக்-கப்பட்டவர்கள், பொய் வழக்கால் புகலிடம் இல்லாமல் போனவர்கள், ஜாதிப்பிரஷ்டம் செய்யப்பட்டவரைப் போல்

சேவை செய்ததற்காக ஒதுக்கப்பட்டுத் தண்டனை அனுபவித்தவர்கள், வேலையிலிருந்து விலக்கப்பட்டவர்கள் வாழ்க்கையின் உச்சிக்குச் சென்றதை நாம் அறிவோம்.

ஒரே சட்டை வைத்திருந்த ஏழைப் பையனைச் சிறு வயதில் நண்பர்கள் எல்லாம் எக்காளமிட்டு சிரித்து, கேலி செய்வதால் அவன் மணி அடித்தவுடன் வீட்டுக்கு ஓடிவிடுவான். பிற்காலத்தில் அவன் புகழ் மாநிலமெங்கும் பரவி, உயர்ந்த ஸ்தாபனத்தின் தலைவனாகவும் ஆனான்.

அளவுகடந்த எழுத்துத் திறமையிருந்தும், எழுத்தாளர் மத்தியில் வாழ்ந்த ஒரு பையனுக்கு அவனுடைய திறமையைப் பாராட்ட ஒருவரும் முன்வரவில்லை. அவர்கள் சேர்ந்து நடத்திய அச்சகத்தில் ஒரு கம்பாஸிட்டர் வேலை கொடுத்தார்கள். 20 ஆண்டுகளுக்குப்பின் அவர்களுள் ஒருவர் பெயர்கூட உலகில் வெளிவரவில்லை. அவனுடைய எழுத்து நாட்டில் பெறாத பரிசேயில்லை.

திறமைக்கும், புலமைக்கும், உரிமையான ஒருவரை ஒதுக்கி விட்டு, வெற்று மாணவனுக்கு ஆசிரியர் முதல் பரிசைப் பாரபட்சத்தின் பரிசாகக் கொடுத்தார். வாழ்க்கை ஓடியது. பரிசை வாங்கியவர் அதன் உதவியால் ஆறு அங்குலம் உயர்ந்தார். மற்றவரைக் கல்லூரிகளும், பல்கலைக்கழகங்களும் தேடிவந்தன. புலமையை மெச்சி பேராசிரியர் பதவி அளித்தனர். புதிய பல்கலைக்கழகம் நிறுவும் பொழுது அவரை முதல் துணைவேந்தராக நியமித்தனர்.

இராமலிங்க சுவாமி எழுதியது அருட்பா இல்லை, அது மருட்பா என ஓர் அறிஞர் வழக்குப் போட்டார். இன்று அவர் பெயர் நம்மில் எவருக்கும் தெரியாது. இராமலிங்க வள்ளலை அறியாதவர் நாட்டில் இல்லை.

கெட்டதாலும், கொடுமையாலும், வம்பாலும், வழக்காலும், பாரபட்சத்தாலும், கேலியாலும், புறக்கணிக்கப்பட்டதாலும், பின்னால் நல்லதே ஏற்படும் என்று சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டேன். இந்த மனப்பான்மை இருந்தால் அன்னை



அதன் மூலம் அளவுகடந்து செயல்படுவார்கள் என்றேன். 25, 30 வருஷங்களுக்குப்பின் வாழ்க்கை அளிக்கும் பலன்களை அன்னை 25 மாதத்திலும், 25 நாட்களிலும் வழங்குவார். அந்த மனப்பான்மையைப் பெற, அதன் மூலம் அன்னை வழிபாட்டைச் சிறப்புறச் செய்ய, நாம் செய்ய வேண்டியதென்ன? செய்யக்கூடியது என்ன?

முதல் கடமையாக எந்தக் காரியம் நடந்தாலும், அதை நல்ல காரியமாக மட்டும் கருதி, அதற்கேற்ற நடைமுறையை மட்டும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒருவன் உன்னைப் பொறாமையால் திட்டி அவமானப்படுத்தினால், இதில் ஏதாவது 1% உண்மையிருக்குமா, நான் திருந்த உதவுமா என மனம் கருத வேண்டும். அவனுடைய பேச்சுக்கு அவனை அறைவதே தர்மம் என்றாலும், அதுபோன்ற காரியத்தையோ, சொல்லையோ சொல்லாமலிருக்க முடிவு செய்ய வேண்டும்.

திட்டியவனுக்குப் பதில் சொல்லாமல் சமாளித்துக்கொண்டு வந்துவிட்டது பெரிய காரியமானாலும், மனம் ஆயிரம் திட்டுகளை அவனுக்கு வழங்கும். அது நம் கட்டுப்பாட்டில் இருக்காது. செயலில் கிடைத்த வெற்றி, எண்ணத்தில் கிடைக்காது. கால் பங்கும் கிடைக்காது. அறிவை விளக்கம் செய்து, அதற்குரியவற்றைச் சொல்லி, புரியவைத்து, பின்னர் நம் பக்கம் இழுக்க முயன்று வெற்றி பெற்றால், அது மௌனம் சாதிப்பதைவிடப் பெரிய காரியம். முடிந்தவரை பயின்று, மேலும் தொடர முடிவு செய்ய வேண்டும்.

செயலைக் கட்டுப்படுத்தி, அறிவை நம் பக்கம் சேர்த்துக் கொண்டாலும், உணர்ச்சி பொங்கி எழும். எப்பொழுதுமே நமக்கு அது கட்டுப்பட்டதில்லை. இதுபோன்ற சமயங்களில் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முயல்வது அறிவீனமாகத் தோன்றும்.

**Air Force**-ல் சேர ஆள் எடுப்பதைக் கேள்விப்பட்டு 400 பேர்கள் வந்தார்கள். அவர்களை வரிசையாக நிற்கச் சொல்லிப் பார்த்துக் கொண்டே வந்த சார்ஜண்ட் இராமசாமியைப் பார்த்ததும் இடப்

புறங்கையால் வேகமாக இராமசாமியின் மார்பில் அறைந்தார். அவர், மேலே மற்றவர்களைப் பார்த்துக்கொண்டு போனார். இராமசாமியின் நிலையும் சார்ஜண்டின் நிலையும், மலையும் மடுவும் போன்றவை. ஏன் அறைந்தார் எனத் தெரியவில்லை; பதில் சொல்ல வாயெழவில்லை; உடல் பதறுகிறது; முகம் சிவக்கிறது; உதடு துடிக்கின்றது. எதுவும் அவர் கட்டுப்பாட்டில் இல்லை. திரும்ப சார்ஜண்டை அவர் அறையாதது ஒன்றுதான் குறை. சார்ஜண்ட் அவரை மட்டும் தேர்ந்தெடுத்தார். ‘உனக்குள்ள தன்மானத் துடிப்பைப் பார்க்கவே அறைந்தேன். நீ கொதித்தெழுந்ததாலேயே தேர்ந்தெடுத்தேன்’ என்றார் சார்ஜண்ட். உணர்ச்சியையும் மாற்றி, பக்குவத்தை ஏற்றுக்-கொள்ளச் சொல்வதைவிட யோகமும், தவமும் எளிது என்று தோன்றும். அதுவும் ஒரு வகையில் உண்மையே.

புறச் செயலை அறிவுக்கு உட்படுத்தி, அறிவை விளக்கத்தை ஏற்றுக்கொள்ளச் செய்து, உணர்ச்சியைக் கட்டுப்படுத்தி, பக்குவத்தை ஏற்றுக்கொள்ளச் செய்து இந்தப் பயிற்சியை ஆரம்பிக்கலாம்.

இவ்வளவையும் ஒருவாறு சாதித்தபின், பழைய பழக்கங்கள், எண்ணங்கள், உணர்வுகள் ஆயிரம் முறை நம் கட்டுப்பாட்டை மீறி எழும். அவற்றை ஒவ்வொரு முறையும் மாற்றி, புதிய அன்னை பாதையில் கொண்டுவருவதே இம்முறையின் குறிக்கோள்.

அதில் வெற்றி கிடைக்க ஆரம்பித்தால் அதன் பிரதிபலிப்பு வாழ்க்கையில் எப்படியிருக்கும் என்பது ஒரு கேள்வி. நமக்குக் கிடைக்கும் வெற்றிக்கு மூன்று நிலைகள் உள்ளன. ஒவ்வொன்றும் முந்தையதைவிட ஆழமானது. ஒவ்வொரு நிலைக்கும் உரிய பிரதிபலிப்பு எப்படி இருக்கும் என்பதைப் பார்ப்போம்.

முதல் நிலை அறிவு நிலை. அடுத்தது உணர்வு நிலை. அதற்கடுத்தது ஆழத்தில் உள்ள முழுநிலை. ஓர் உதாரணத்தின் மூலம் கூறுகிறேன்.



ஒரு நகை அல்லது உரிமை அல்லது சொத்துப் பிரச்சனை ஏற்படுகிறது. ஒருவருக்கு முழு உரிமையிருக்கிறது. ஆனால் உரிமையை நிலைநாட்ட வேண்டிய எல்லா அத்தாட்சிகளும் இல்லை. ஓர் அத்தாட்சிகூட இல்லை. ஊரில் பலருக்கும் உண்மை தெரியும். என்றாலும் பஞ்சாயத்தில் உண்மையைவிட தாஸ்தாவேஜு மட்டுமே செல்லுபடியாகும். இந்த நிலையில் அவருக்குச் சந்தேகம் வரும். பல எண்ணங்கள் தோன்றும். இல்லை என்று மனம் கூறும். இருந்தாலும் யார் நியாயத்தைப் பேசுவார்கள் என்று மனம் கேட்கும். எழுத்தில் இல்லாததை எவர் ஏற்றுக்கொள்வார் என்று மனம் கூறியபடி இருக்கும்.

இவருக்கு முதல் நிலையான அறிவு நிலையிலேயே நல்லது நடக்கும்’ என்று சொல்லிக்கொள்ள முடியாவிட்டால், பிரச்சனையே இல்லை. சொத்து தானே பறிபோய்விடும். பஞ்சாயத்தளவுக்கு வர வேண்டிய கட்டமே வராது. மாறாக அறிவால், ‘தெளிவாக நல்லது நடக்கும்’ என்று அவர் நம்பி, உணர்வு ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், பஞ்சாயத்தில் அனைவரும் இவருடைய உரிமையை ஏற்றுக் கொண்டு பேசுவார்கள். எவரும் உரிமையை மறுக்கமாட்டார்கள். அறிவு நம்பியதன் பலன் அத்துடன் நின்றுவிடும். மேலும் எழும் விவாதம் பல வகைகளாகச் செல்லும். பஞ்சாயத்தார் இவரை வாயளவில் ஏற்றுக் கொள்கிறார்களே தவிர, சொத்துக்கு உரியவனுக்கு அநீதி இழைக்கப்படுவதை அவர்கள் உணர்வு ஏற்றுக்கொள்ளாது. அதற்குரிய வாதங்கள் எழும். பலன் இவருக்குக் கிடைக்காது.

அடுத்த கட்டமாகிய தம் உணர்வில் ‘நல்லதே நடக்கும். நல்லது மட்டுமே நடக்கும்’ என்று இவர் உணர்ந்தால், பஞ்சாயத்தில் அனைவரும் பதறிப்போவார்கள். இவருக்காக உணர்ச்சிபூர்வமாகப் பரிந்து பேசுவார்கள். ஆனால், வேறொரு பிரச்சனை ஏற்பட்டு முட்டுக்கட்டையாகும். சொத்து இவருக்குக் கிடைக்காமல் போய்விடும்.

கடைசி கட்டமான ஆழ்ந்த மனத்தளவில் அசையாமல் ‘நல்லது மட்டுமே நடக்கும்’ என இவர் உறுதியாக நினைத்தால்,

பஞ்சாயத்தில் குதர்க்கவாதிகளிருந்தாலும், பொறாமைக்காரர்கள் இருந்தாலும், அவர்களெல்லாம் புறக்கணிக்கப்பட்டு சொத்து இவரை வந்தடையும்.

அதுவும் அப்படிப்பட்ட மனநிலையை அன்னை பக்தர்கள் ஏற்றுக் கொண்டால் சாதாரண மனிதனைவிட ஒரு கட்டம் அதிகமாக அவர்களுக்குப் பலிக்கும். சொல்லப்போனால் முதற்கட்ட நல்ல எண்ணம் கடைசியில் முழுப்பலனையும் கொடுக்கும்.

மனம், மொழி, மெய்களால் நல்லதை மட்டும் விழையும் மனப்பாங்கு, அன்னையை ஏற்றுக்கொண்ட நிலை, இரண்டையும் உடையவர்களுக்குப் புத்தி ஒரு பெரிய கருவி. நல்ல எண்ணம் திறன் வாய்ந்த கருவி. கருவியின் பலனை அன்னை முழுமையாக்கிக் கொடுப்பார்.

ஞானயோகத்தில் இறைவனை உணர ஒரு முறையை முக்கியமாகக் கருதுவார்கள். அந்த விசாரத்தைப் பயிலுவதற்கு, பயின்று இறைவனே எல்லாம், மற்றவை எல்லாம் மாயை என உணருவதற்கு, 'நான் யார்' என்ற கேள்வியைக் கேட்பார்கள். உடலைப் பார்த்து, 'நான் உடல் இல்லை'; அறிவைப் பார்த்து, 'நான் அறிவில்லை', 'நான் மனமில்லை', 'நான் செயலில்லை', 'நான் உணர்வில்லை' என்று நமக்குத் தெரிந்த அத்தனையும் உண்மையான 'நான்' இல்லை என்று விலக்கியபின் உண்மையான 'நான்' தானே உதயமாகி, ஞானம் ஏற்படுகிறது. மனிதனை விலக்கி, அவனுள் உள்ள இறைவனை உண்மையான 'நான்'ஆகக் கண்டறியும் பாதை ஞானயோகம்.

'இது நடக்காது', 'இது ஆபத்து', 'அவர் உதவமாட்டார்', 'நான் சொல்வதைக் கேட்கமாட்டார்', 'எனக்கில்லை இது', 'என்னால் முடியாது' என்பன போன்ற ஆயிரம் நம்பிக்கையில்லாத எண்ணங்கள், 'இல்லை' என்ற எண்ணங்கள் மனதில் தோன்றும். அதுவும் ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பிக்கும்முன் தோன்றும். அப்பொழுதெல்லாம் 'இது அன்னைக்குகந்த எண்ணமில்லை' என இவற்றை விலக்கிக்கொண்டே இருந்தால், 'இது நடக்கும்', 'இது சரி', 'அவர் உதவுவார்', 'நான் சொல்வதைக் கேட்பார்', 'எனக்குண்டு', 'என்னால் முடியும்' போன்ற எண்ணங்களை மட்டும் மனதில் அனுமதிக்கக் கற்றுக்கொண்டால், மனத்தின் போக்கு மாறி, மனப்பாங்கு உயர்ந்ததாகி, வெற்றியின் கருவியாகும். அன்னைக்குரிய அற்புதக் கருவியாகும். இது வாழ்க்கைக்குச் சிறப்பு அளிக்கக்கூடியது. அன்னைக்கு உரியது. அதனால் பெருஞ்சிறப்புக்குரியது. இப்படிப்பட்ட மனப்பாங்கால் வாழ்க்கையில் சாதிக்க முடியாதது என்று ஒன்று இல்லை.



ஸ்ரீ அரவிந்தர் கோட்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு ஒரு புதிய மதம் ஆரம்பிக்க வேண்டும் என ஐரோப்பாவில் ஒரு குழுவினர் அன்னையைக் கேட்டனர். அதற்கவர் கொடுத்த பதில் மதம் மனிதனுக்கு உதவிய காலம் மாறிவிட்டது. எதிர்காலம் ஆன்மிகத்திற்கே உரியது என்பதாகும். மேலும் அதை விளக்கமாகவும் சொல்கிறார் அன்னை.

ஒருவருடைய ஆன்மிக அனுபவத்தைப் பலருக்குப் புரியும்படி, பாமரனுக்கு எட்டும் வகையில், விளக்கங்கள் மூலமாகவும், நிகழ்ச்சிகள் மூலமாகவும் சொல்லி மனிதனை வழிநடத்த முயன்றது மதம். அந்த வகையில் அதன் சேவை இதுவரை தேவைப்பட்டது. எதிர்கால மனிதனுக்குப் பிறருடைய ஆன்மிக அனுபவம் போதா. நேரடியாகத் தானே பெறும் ஆன்மிக அனுபவமே எதிர்கால மனித வாழ்க்கையைச் செப்பனிடும். நேரடியாகத் தானே ஆன்மிக அனுபவம் பெறுவது, மௌனம் மனத்தைத் தீண்டுவது, தியானம் தானே அமைவது, இறைவனை மனத்தில் காண்பது போன்ற ஆன்மிக அனுபவங்களே இனி வருங்காலத்திற்கு உதவும் என்று அன்னை விளக்குகின்றார்.

செயல் நிறைந்த வாழ்க்கையில் எண்ணங்கள் பதினாயிரம் உற்பத்தியாகின்றன. ஆன்மிக அனுபவமான சாந்தம், மௌனம், தியானம் மட்டும் பூரணயோகத்திற்குப் போதாது. ஒவ்வொரு செயலையும், எண்ணத்தையும், உணர்ச்சியையும் ஆன்மிகச் செயலாக, ஆன்மிக எண்ணமாக, ஆன்மிக உணர்வாக மாற்றி அமைத்தால்தான் பூரணயோகப் பாதையில் அடி எடுத்து வைக்க முடியும்.

‘நல்லதே நடக்கும்’, ‘நல்லது மட்டுமே நடக்கும்’ என்ற எண்ணம் இறைவனை எண்ணத்தில் வெளிப்படுத்தும் முயற்சியின் வெற்றியாகும். ‘இது நடக்காது’ என்று நினைப்பவன் மனிதன். மனிதனுள் உள்ள தெய்வம் ‘இது நடக்கும்’ என்று பேசும். ‘இது நடக்காது’ என்று தோன்றுவதை, ‘இது நடக்கும்’ என்று நாம் முயன்று மாற்றும்பொழுது நம்மை விலக்கி, ‘நான்’ என்பதை விலக்கி, நம்முள் உள்ள மனிதனை ஒதுக்கி, உள்ளுறை தெய்வத்தைப் பேசவைப்பதாகும். எண்ணத்தை ஆன்மிக எண்ணமாக மாற்றுவதாகும். எண்ணத்தின் அளவில் ஆன்மாவுக்கு ஓர் இடம் கொடுப்பதாகும். அதன் வழியே அன்னையின் ஆதிக்கத்திற்கு அதிக இடம் கொடுப்பதாகும்.

தொடரும்...

## ஜீவிய மணி

*தன் நேர்மைக்கும் திறமைக்கும், அம்சத்திற்கும், அதிர்ஷ்டம் வரவில்லை என நினைப்பவர் எதைப் பெற வேண்டும் என விழைந்தாரோ அதைப் பெறலாம். அதுவே குறைந்தபட்சப் பலன். ஏனெனில், இது அவர் நிர்ணயம் செய்த முடிவு. அன்னை அவருக்கு அளிக்கக்கூடியது அதிகபட்சம். அதை அவரால் நிர்ணயம் செய்ய முடியாது. அன்னையை அறிந்து, அறிவதை நம்பி, நம்புவது செயல்படத் தடையானவற்றை விலக்கினால் அது பலிக்கும். அன்னையை என்னவென்று அறிவது? தெய்வமாகவும், அவதாரமாகவும், சக்தியுள்ள தெய்வமாகவும் அறிவோம். தெய்வங்களிடம் இல்லாத சக்தி அன்னையிடம் இருப்பதை, அது நம் வாழ்வில் பலித்திருப்பதை, அச்செயல் என்ன தத்துவத்தை விளக்குகிறது என அறிவது, அன்னையை அறிவதாகும். அதை நம்பினால், இத்தருணம் அந்நம்பிக்கையை நிரந்தரமாக்கும். நம்பிக்கை பூரணமானால் நிரந்தரப் பலன் உண்டு. இல்லையேல் உள்ள நம்பிக்கைக்கு ஒரு பெரும் பலன் இந்த நேரம் உண்டு.*



# அன்பர் அனுபவம்

P. நடராஜன்

### காணாமற்போன பொருள் அன்னைக்குக் காணிக்கை வைத்தவுடன் கிடைத்த அனுபவம்

காணாமற்போன பொருள் அன்னைக்குக் காணிக்கை வைத்துப் பிரார்த்தித்தவுடன் கிடைப்பது அன்பர்களுக்குப் புதியது அல்ல. ஆனால் ஸ்ரீ அன்னையின் அருள் செயல்படும் நுணுக்கம், சிதம்பரம் அன்பர் K. ரமேஷ் அவர்களின் அனுபவம் வழியாக சிறிதளவு எனக்குப் புரிந்தது.

அன்பர் **Apple iPod** என்ற இசைக் கேட்கும் கருவியைப் பயன்படுத்துவது வழக்கம். சார்ஜ் போடவேண்டி **Charger Cable**-ஐ **iPod** வைத்திருந்த பெட்டியில் பார்த்தால் காணவில்லை. பொருள்களை நன்கு வைத்துக்கொள்ளும் நெறியானவர் இவர். அலமாரி, ஷெல்ப் என எங்கு தேடியும் கிடைக்கவில்லை. **Apple electronic** பொருட்களின் **spares** மற்ற கம்பெனி பொருட்கள் போல் எளிதில் கிடைப்பதில்லை. எனவே மனதில் சங்கடம் எழ, அவரது தம்பியிடம் வேறு ஒரு கேபிள் கிடைக்குமா எனக் கேட்டதற்கு, அவரும் கிடைக்கும் **Rs.**1000/-த்திற்குமேல் இருக்கும் என்று கூறினார்.

மனதில் அமைதியை வரவழைத்துக்கொண்டு, அன்னையின் திருவுருவப் படத்தின்முன் காணிக்கை வைத்து, ‘அன்னையே என் தவறு கேபிளை கவனமாக வைத்துக் கொள்ளாதது’ எனப் பிரார்த்தித்து, மீண்டும் ஒருமுறை அலமாரியில் தேடிவிட்டு கம்ப்யூட்டரில் அவரது வேலையைப் பார்க்கப் போனார்.

வேலையை முடித்துவிட்டு பொருள்களை மீண்டும் எடுத்த இடத்தில் வைக்கும் போது, அந்த **iPod** பெட்டி கம்ப்யூட்டர் மேல் இருந்ததை, இது ஏன் இங்கிருக்கிறது! என எண்ணியபடியே எடுத்து வைக்கப் போனால், பக்கத்தில் ஒரு கறுப்புப் பெட்டி இருக்க, அதைத் திறந்து பார்த்தால், அதனுள் **charger** கேபிள் இருந்திருக்கிறது. சந்தோஷத்துடன் அன்னைக்கு நன்றி சொல்லி மீண்டும் அதை **iPod** பெட்டியில் பத்திரப்படுத்தினார்.

அன்னையிடம் காணிக்கை வைத்த ஒரு மணி நேரத்தில் பொருள் கிடைத்துவிட்டது என சந்தோஷத்துடன் என்னிடம் பகிர்ந்து கொண்டார்.

அந்த iPod பெட்டி எப்படி அங்கு வந்தது என நான் கேட்டபோது, முதலில் charger கேபிள் இல்லை என்றவுடன், iPod பெட்டியை அலமாரியில் வைத்து விட்டதாகவும் பின் அன்னையிடம் வேண்டியபின் மீண்டும் தேடிய போது, கை மறதியாக அப்பெட்டியை computer மீது வைத்தாகவும் கூறினார்.

தேடும் போது கை மறதியாக வைத்த iPod பெட்டிக்குப் பக்கத்தில்தான் கேபிள் இருந்த பெட்டி இருந்துள்ளது.

அன்னையிடம் கூறியவுடன் அருள் iPod-ன் ஜீவனைத் தீண்டியதால் அதுதானாகவே தனக்குச் சொந்தமான கேபிள் பக்கத்தில் போய் அமர்ந்து கொண்டது.

iPod அதன் பொருளை அதுவே தேடிக் கொண்டது.

## ஜீவிய மணி

*எதிரியைக் கொன்று வெற்றி வாகை சூடியது ஒரு காலத்து நீதி. எதிரியுடன் சமாதானம் செய்து அமைதியாக வாழ்வது அடுத்த காலத்தில் நீதியாகக் கருதப்பட்டது. எதிரி இல்லாமல் இருப்பது, எதிரியுடன் ஒத்துழைத்து அவர் உயர்வு பெறுவது என்ற நீதி அதற்கு அடுத்த நிலை. கொல்வது ஜடமான உடலுக்கு உரிய நீதி. சமாதானம் செய்வது உணர்வுக்கு உரியது. ஒத்துழைப்பது அறிவின் நீதி. ஆன்மாவுக்கு உரிய நீதி எது?*

**Each is in all, all is in each**

*நான் உன்னிலும், நீ என்னிலும் இருப்பது ஆன்மாவுக்கு உரிய நீதி. இதை நடைமுறையில் பின்பற்றுவது எப்படி? உனக்கு இழைக்கும் தீங்கு எனக்கு இழைக்கப்படுவதாக நான் உணர்வதும், நீ என்னைத் தோற்கடித்துப் பெற்ற வெற்றி என் வெற்றி என உணர்வதும் ஆன்மிக நியதியாகும்.*



# அன்னை இலக்கியம்

## பார்வைகள்

(பிப்ரவரி 2015 இதழின் தொடர்ச்சி)

சமர்ப்பணன்

### 20. சந்துருவின் பார்வை

பூரணி வேலைக்குச் சேர்ந்த ஒரு வாரத்திற்குள் வீடு இதுவரை நான் அறிந்திராத ஒன்றாக மாறிவிட்டது. சீர்திருத்தங்களை அவள் வேண்டுகோள்களாகத்தான் எங்கள் முன்வைத்தாள். அவற்றை கட்டளைகளாக ஏற்றுக் கீழ்ப்படிந்தோம். எல்லா பொறுப்புகளையும் அவளிடம் விட்ட பின்பு, வாழ்வு அமைதியான நதியாகி விட்டது என்று தோன்றியது. ‘பணப்பொறுப்பையும் பூரணியிடமே கொடுத்து விடட்டுமா?’ என்று மற்றவர்களிடம் கேட்டபோது ‘உடனே செய். உன்னைவிட நன்றாக நிர்வாகம் செய்வாள்’ என்றனர்.

குடும்பத்தில் ஒருத்தியாக வந்த நாளே அவளை என்னால் ஏற்க முடிந்தது. மற்றவர்களுக்கு மூன்று நாட்கள் தேவைப்பட்டன.

மந்திரா மறக்காமல் தினமும் ‘பூரணி எப்போது ஊருக்குத் திரும்பிப் போவாள்?’ என்று கேட்டுக் கொண்டிருந்தாள். என் பதில்கள் அவளைத் திருப்திப்படுத்தவில்லை.

இன்று காலை நான் அலுவலகத்திற்குள் நுழைந்ததும் அலுவலகத் தலைவரான பெரிய சார் என்னை மணியடித்து அழைத்தார். ஒரு மணியடித்தால் பியூன். இரண்டு மணியடித்தால் நான். சின்ன சார் பெயரைக் கூவி அழைப்பார்.

‘நீ பெரிய எழுத்தாளனாமே? மந்திரா சொன்னாள்’ என்று கேட்டார் சார்.

‘என் அக முன்னேற்றத்திற்காக எழுதிக் கொள்ளும் சாதாரண எழுத்தாளன்தான். என் எழுத்து பெண்களின் எழுத்து போல குண்டு, குண்டாக, பெரியதாக இருக்கும். அதனால் பெரிய

எழுத்தாளன் என்று மந்திரா சொல்லி இருப்பாள். என்மேல் பிரியம் கொண்ட விஷமி!' என்றேன்.

'பெரிய பத்திரிக்கைகளில் உன் கதைகள் வருமா?' என்று கேட்டார் சார்.

'பல புனைப் பெயர்களில் முன்பு எழுதிக் கொண்டிருந்தேன். சமீபத்தில் நிறுத்தி விட்டேன்' என்றேன்.

'ஏன்? சன்மானம் குறைவோ?' என்றார் சார்.

'அது பிரச்சனை இல்லை. தமிழில் நல்ல கதைகள் எழுதி சம்பாதித்துவிட முடியுமா என்ன! அது மலையாளத்திலும், கன்னடத்திலும்தான் முடியும். தமிழில் சினிமா தொடர்பு இருந்தால் ஒருவேளை அது நடக்கலாம். அமுதம் பத்திரிக்கைக்காக உபநிஷதத்தில் வரும் நசிகேதன் சொல்லும் ஐம்புரவித்தேர் பற்றிய ஒரு கதை எழுதினேன். கதைக்குப் பக்கத்தில் பிரபல நடிகர், நீச்சல் உடை அணிந்த ஐந்து நடிகைகளை அணைத்துக் கொண்டிருப்பது போல படம் போடப்பட்டிருந்தது. அன்றோடு வணிகப் பத்திரிக்கைகளுக்கு எழுதுவதை விட்டுவிட்டேன்' என்றேன்.

'அதிலென்ன தப்பு? அப்படி படம் போட்டால்தான் வயதானவனும் பத்திரிக்கை வாங்குவான். வியாபாரம் நடக்கும். விளம்பரம் கிடைக்கும். பத்திரிக்கையை தொடர்ந்து நடத்த முடியும். மனிதனுக்கு உயர்ந்த மனம், பண்பு, குணம் என்று எதுவுமே வளரவில்லை. எல்லோருமே சட்டை போட்ட காட்டு மிருகங்கள்தான். பசியும், காமமும்தான் மனிதனோடு பிறந்தவை. இயற்கையானவை. பசி தன்னை வளர்ப்பதற்கு. காமம் தன் இனத்தை வளர்ப்பதற்கு. அவை இரண்டுமே மூச்சடங்கும் வரை, திரும்பத் திரும்ப எழுந்து கொண்டே இருக்கும். இதைப் போய் பெரிய குற்றமாகச் சொல்கிறாயே?' என்றார் சார்.

'சார், உடல் மட்டுமே மனிதனில்லை. நீங்கள் சொல்வது உடலின் பழக்கங்கள்' என்றேன்.

'அவற்றை மாற்றக் கிளம்பிவிட்டாயா?' என்று கேட்டார் சார்.



'என்னுடைய உலகத்தை, அகத்தை, அனுபவங்களைப் புரிந்து கொள்ள, புரிந்து கொண்டதை தெளிவோடு தொகுத்துக் கொள்ள, அதன் மூலம் ஆன்மிக முன்னேற்றம் அடைய எனக்காக நான் எழுதுகிறேன். வணிகப் பத்திரிக்கையின் வழிமுறை எனக்கு ஒத்து வரவில்லை. என் லட்சியம் வேறு வகையானது. நேர்மையானது' என்றேன்.

'அப்பா சம்பாத்தியத்தில் வாழ்கிறாய் அல்லவா? அதனால் லட்சியவாதியாக இருப்பது சுகமாக இருக்கும். சொந்தமாக சம்பாதிக்கும் போது உன் லட்சியவாதக் கோளாறு சரியாகிவிடும்' என்றார் சார்.

'என் லட்சியமும், நேர்மையும் தீவிரமானவை' என்றேன்.

'ஆடிட்டராகப் பயிற்சி எடுக்கிறாய். காலையிலிருந்து மாலைவரை கள்ளக் கணக்குத்தான் எழுதுகிறாய். அப்போதெல்லாம் உன் லட்சியமும், நேர்மையும் நினைவுக்கு வராதா?' என்று கேட்டார் சார்.

நான் மௌனமாக நின்றேன்.

'கதை என்றால் எல்லோரும் படிப்பது போல எழுத வேண்டும். உபநிஷதம், நசிகேதன் என்று எழுதினால் எவன் படிப்பான்? காதல் கதை அல்லது மர்மக் கதை எழுது. பிரபலமாகி விடுவாய்' என்றார் சார்.

'சரி சார்' என்றேன் சலிப்போடு.

'நீ பொதுவாக என்ன மாதிரியான கதை எழுதுவாய்?' என்று கேட்டார் சார்.

'ஆன்மிக நோக்கு இருக்கும் கதைகள்' என்றேன்.

'அதற்கும் நல்ல வரவேற்பு இருக்குமே. சுலபமாக எழுதி விடலாம். ஒரே சூத்திரம்தான். கதாநாயகனுக்கு கஷ்டம் வரும். கடவுளிடம் வேண்டிக் கொள்வான். எல்லாம் சரியாகிவிடும். நானே கூட எழுதலாம்' என்றார் சார்.

'என்னுடைய ஆர்வம், ஆன்மிகத் தத்துவங்கள், மனிதப்பண்பாடு, மானுட அறங்கள், உளவியல் சிக்கல்கள் பற்றி ஆராய்வது' என்றேன்.

‘அடேங்கப்பா! உன் கற்பனா சக்தியை இப்படிப்பட்ட தேவையில்லாத விஷயங்களில் வீணடிப்பதற்குப் பதில், அதை வாடிக்கையாளர்களின் வருமான வரிக் கணக்குகளை எழுதப் பயன்படுத்தினால் நமக்கு வருமானம் பெருகும்’ என்றார் சார்.

‘சரி சார்’ என்றேன்.

‘என் பையனுக்குப் பள்ளிகூடத்தில் ஒரு கட்டுரைப் போட்டி நடக்கிறது. பிரெஞ்சுத் தலைவர் எவரைப் பற்றி வேண்டுமானாலும் எழுதலாம். அவனுக்குப் பரிசு கிடைக்கும்-படியாக ஒரு கட்டுரை எழுதிக் கொடு’ என்றார் சார்.

‘கன்னிமாரா நூலகத்தில்தான் பிரெஞ்சுத் தலைவர்கள் பற்றிய புத்தகங்கள் கிடைக்கும்’ என்றேன்.

‘நீ எங்கே வேண்டுமானாலும் போ. என்ன வேண்டுமானாலும் செய். மூன்று நாட்களுக்குள் எனக்கு கட்டுரை வேண்டும்’ என்றார் சார்.

‘இப்போதே கன்னிமாராவிற்குக் கிளம்புகிறேன்’ என்றேன்.

‘சரி’ என்றவர் தொடர்ந்து ‘உன்னுடைய ஐம்புரவித்தேர் கதை வந்த பத்திரிக்கை பிரதியை எனக்கு கொடப்பா. படம் பார்க்க வேண்டும்’ என்றார்.

சிரித்தேன். ‘வருகிறேன் சார்’ என்று கூறிவிட்டுக் கிளம்பினேன்.

ஆசிய கண்டத்திலுள்ள பெரிய நூலகங்களில் ஒன்று என்று பெயர் வாங்கியிருந்த கன்னிமாரா நூலகம் வாசிப்பாரின்றி, கவனிப்பாரின்றி, தூசி படிந்த புத்தகங்களோடு என்னை வரவேற்றது.

‘மாதாமாதம் பணம் அனுப்புகிறேன். வீடு நிறைய வேண்டிய சாமான்களை வாங்கி வைத்துக் கொண்டு சந்தோஷமாக இருங்கள்’ என்று கூறி வெளிநாடு சென்று விட்ட பிள்ளைகள் கைவிட்ட தனித்து வாழும் வயதான பெற்றோர்களை கன்னிமாரா நினைவூட்டியது. எவரும் பயன்படுத்தாத புத்தகங்களைப் பார்த்தபோது ‘கன்னிமாறா’ நூலகம் என்று பெயர் வைத்திருக்கலாமோ என்று தோன்றியது.



பல மாடிகள் கொண்ட நூலகத்தில் செய்தி, வாரப் பத்திரிக்கைகள், நாவல்கள், சமையல் புத்தகங்கள் உள்ள பகுதிகளான முதல் மாடியிலும், இரண்டாவது மாடியிலும் ஓரளவு கூட்டமிருந்தது.

அறிவியல், வரலாறு, தத்துவம், பொருளாதாரம் பற்றிய புத்தகங்கள் கீழ்த்தளத்தில் இருந்தன. மனித நடமாட்டமின்றி புத்தகங்கள் அஞ்சி உறைந்திருந்தன.

பிரெஞ்சுத் தலைவர்களில் எவரைப் பற்றி எழுதுவது? நெப்போலியன்? எல்லோரும் அவனைப் பற்றித்தான் எழுதுவார்கள். டூப்ளே? நன்றாக வாழ்ந்திருக்க வேண்டியவன். மனைவிமேல் கொண்ட பிரியத்தால் அவள் தவறான போக்கை ஆதரித்து அழிந்தவன். எதிர்மறையானவர்களைப் பற்றி எழுதுவதால் ஒரு பயனும் இல்லை.

ஜோன் ஆப் ஆர்க் நினைவிற்கு வந்தாள். உற்சாகமானேன். அப்போதே பரிசு வாங்கிவிட்ட உணர்வு உண்டாகிவிட்டது.

எந்தப் புத்தகம் வேண்டுமானாலும் எந்த அடுக்கில் வேண்டுமானாலும் இருக்கலாம் என்பது இந்திய நூலகங்களில் உள்ள எழுதப்படாத சட்டம். அதனால் ஒவ்வொரு புத்தகமாக எடுத்துப் புரட்டிப் பார்க்க ஆரம்பித்தேன். ஸ்ரீ அரபிந்தோ என்று தலைப்பிட்ட முப்பது தொகை நூல்களும், மதர் என்று தலைப்பிட்ட பதினேழு தொகை நூல்களும், அஜெண்டா என்று தலைப்பிட்ட பதின்மூன்று தொகை நூல்களும் கண்களைக் கவர்ந்தன. அழகான கட்டமைப்பு. நல்ல காகிதம். சிறிது நேரம் அவற்றை வருடிக் கொடுத்தேன். இவற்றை வாசிக்க இப்போது நேரமில்லை. எனக்கு ஜோன் ஆப் ஆர்க்தான் வேண்டும். இத்தொகை நூல்களில் ஜோனைப்பற்றி எதுவும் இருக்க வாய்ப்பில்லை.

சிறிது நேரத்தில் ஜோனைப்பற்றிய மூன்று புத்தகங்கள் கிடைத்தன. அவற்றில் ஆழ்ந்தேன். என்னை மாணவனாக பாவித்துக் கொண்டு, எளிமையாக சிந்தித்தேன். பல வருட இலக்கியப் பயிற்சியை மறந்தேன். எழுதுவதில் மட்டும்

தனிப்பட்ட கவனம் செலுத்தி அதில் மனத்தை ஒருமுனைப்படுத்தினேன். பிற அனைத்தையும் மறந்தேன்.

பூரணி கொடுத்தனுப்பியிருந்த மதிய உணவை நூலகத்திலேயே உண்டேன். மாலை நான்கு மணிக்குக் கட்டுரை தயாராகிவிட்டது. அதற்குமேல் அலுவலகம் செல்வது அவசியமில்லை என்பதால் வீடு திரும்பினேன்.

புன்னகையோடு வரவேற்றாள் பூரணி. 'ஏன் சீக்கிரம் திரும்பினாய்?' என்று கேட்டால்தான் என்ன? தனிப்பட்ட விஷயங்களைப் பற்றி எவரையும் எதுவும் கேட்க மாட்டாள். கேட்க நினைக்கவும் மாட்டாள் என்று தோன்றியது. அதனால்தானோ என்னவோ அவளிடம் எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்ல வேண்டும் என்ற உந்துதல் உண்டாகிவிடுகிறது.

கன்னிமாரா சென்று கட்டுரை எழுதியதைப் பற்றிக் கூறினேன். ஒரு தட்டு நிறைய கேசரி கொடுத்தவள், 'தெளிவான அழைப்பு! அபாரமான விழிப்பு!' என்றாள்.

'புரியவில்லை. ஆனால் கேசரி பிரமாதம்' என்றேன்.

'முந்தைய பிறவிகளில் ஸ்ரீ அரபிந்தோ நெப்போலியனாக இருந்தாராம். மதர் ஜோன் ஆப் ஆர்க்காக இருந்தாராம்' என்றாள் பூரணி.

'நான் கூட காளிதாசனாகவும், அதன்பின் கம்பனாகவும் இருந்திருக்கிறேன்' என்றேன்.

'அதனால்தான் உங்கள் கதைகளில் பெண்களைப் பற்றி வர்ணிக்கும்போது பேனாவில் மைக்கு பதில் மலைத்தேனை நிரப்பிக் கொள்கிறீர்கள் போலிருக்கிறது! ஆனால் எனக்கென்னவோ நீங்கள் விகடகவியாக இருந்திருப்பீர்கள் என்றுதான் தோன்றுகிறது. எதைச் சொன்னாலும் இடக்காக பேசுகிறீர்கள்' என்றாள்.

நான் சிரித்தேன்.

'உங்களுக்கும், ஸ்ரீ அரபிந்தோவிற்குமான போன ஜென்மத்து உறவு தொடர்கிறது' என்றாள் பூரணி.



போன ஜென்மத்தைப் பற்றித் தெரியாது. ஆனால் இந்த ஜென்மத்தில் உறவு இருக்கிறது. பத்து வருடங்களுக்கு முன்னால் என் அப்பா ஸ்ரீ அரபிந்தோவின் நிறுவனம் ஒன்றிற்கு மின்சார வேலை செய்து தந்தார். அவருடன் சென்றிருந்த அம்மா திரும்பி வந்தபின் ஒரு வாரம் அங்கிருந்த மலர்களைப் பற்றி புகழ்ந்து கொண்டே இருந்தார். 'ஒரு முறைதான் போனார்களா? மீண்டும் போகவில்லையா?' என்று இந்த இடத்தில் நீங்கள் கேட்க வேண்டும்' என்றேன்.

'நான் கேட்டாலும், கேட்காவிட்டாலும் சொல்லத்தானே போகிறீர்கள்' என்றாள் பூரணி.

'ஒரு வாரம் கழித்து அரசாங்கம் அப்பாவை ஐந்து வருடங்கள் வெளிநாட்டிற்குப் போய் வர ஆணையிட்டது. நான்கு மடங்கு அதிகச் சம்பளம் என்றாலும் சிறு குழந்தைகளை விட்டுவிட்டுப் போக முடியாது, படிப்பு கெட்டு விடும் என்று அப்பா மறுப்புக் கடிதம் எழுதிவிட்டார். அதற்கு அடுத்த வாரம் ஒரு வேடிக்கை நடந்தது. அதே போல ஆணை என் சித்தப்பாவிற்கு வந்தது. அவர் அதை உடனே ஏற்றுக் கொண்டு தன் குழந்தைகளை எங்கள் வீட்டில் விட்டுவிட்டு வெளிநாடு சென்று விட்டார்! அதன்பின் அப்பாவிற்கும் பதவி உயர்வு வந்து வேறு பிரிவிற்கு மாறிவிட்டார். அதனால் மீண்டும் அந்த நிறுவனத்திற்கு போகும் வாய்ப்பு அவருக்கு ஏற்படவில்லை' என்றேன்.

'இந்த இடத்தில் 'நீங்கள் போயிருக்கிறீர்களா' என்று கேட்க வேண்டுமா?' என்று கேட்டாள் பூரணி.

'அரசியல்வாதிக்கும், மதவாதிக்கும் கேள்வி கேட்டால் பிடிக்காது. கேள்வி அவன் எதிரி. கதைசொல்லிக்கும், ஆன்மிகவாதிக்கும் கேள்வி கேட்டால்தான் மேற்கொண்டு சிந்திக்கவும், பேசவும் உற்சாகம் வரும். கேள்வி அவனது பிரிய தோழி' என்றேன்.

'நீங்கள் போயிருக்கிறீர்களா?' என்று கேட்டாள் பூரணி.

'எந்த நிறுவனத்தோடும் என்னைப் பிணைத்துக் கொள்ள நான் விரும்பியதில்லை' என்றேன்.

‘உங்கள் தனித்துவமும், சுதந்திரமும் பறி போய்விடுமாக்கும்’ என்றாள் பூரணி.

‘ஆமாம்’ என்றேன்.

‘புறம் வேண்டாம் என்றாலும் அகம் விரும்புவதுதான் நடக்கும்’ என்றாள் பூரணி.

‘இன்னொரு நிகழ்ச்சி நினைவிற்கு வருகிறது. போன வருடம் வங்கித் தணிக்கைக்காக திண்டிவனம் போனேன். தாம்பரத்தில் பாலத்தைப் பழுது பார்க்கிறார்கள் என்று சொல்லி வண்டியைப் பாண்டிச்சேரி வழியே திருப்பி விட்டார்கள். வண்டியோ பாண்டியில் பழுதாகி நின்றுவிட்டது. சரி செய்ய ஒரு மணி நேரம் ஆகும் என்றார்கள். கடற்கரைக்குப் போனேன். போகும் வழியில் ஸ்ரீ அரபிந்தோவின் சமாதி இருக்கும் வீட்டைப் பார்த்தேன். உள்ளே போகாமல் அப்படியே கடற்கரைக்குச் சென்று சுடச்சுட பட்டாணி, சுண்டல், குளிரக்குளிர கரும்புச்சாறு சாப்பிட்டு விட்டு திண்டிவனம் சென்று விட்டேன்’ என்றேன்.

‘சரியான ஜடப்பிரம்மம்’ என்றாள் பூரணி.

‘ஆன்மிகம் எனக்குப் பிடித்தமான விஷயம்தான். ஆனால் இதுதான் வழி என்று என்னை எந்த வகையிலும் குறுக்கிக் கொள்ள விரும்பவில்லை. எதையும் நிராகரிக்கவும் இல்லை. எல்லா வழிகளையும் ஆராய்ந்து, பொருத்தமானவற்றை ஒன்று சேர்த்து வாழ விரும்புகிறேன்’ என்றேன்.

‘அது பூரண சிந்தனை இல்லாமல் வேறு என்னவாம்? மனிதனுக்குச் சுயமாக தெரிந்தெடுக்கும் சுதந்திரமான உரிமை உண்டு என்றாலும் சில விஷயங்கள் சிலருக்குத்தான் என்று இறைவன் நிர்ணயித்துவிடுகிறான். அதைத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் மீற முடியாது’ என்றாள் பூரணி.

அழைப்புமணி வேகமாக ஒலித்தது. ‘நான் சீக்கிரம் திரும்பினால் மற்றவர்களும் அப்படியே செய்கிறார்கள்’ என்று கூறியபடி வாசல்கதவைத் திறந்தேன். எவருமில்லை. தரையில்



மாதப் பத்திரிகையான ‘கல்பதரு’ வீசி எறியப்பட்டிருந்தது. எடுத்துக் கொண்டு உள்ளே வந்தேன்,

‘பூரணி, நீங்கள் வேலைக்குச் சேர்ந்த தினத்தன்று போன மாத ‘கல்பதரு’ வந்தது. வாடகை நூலகம் நடத்தும் பையன் பக்கத்து வீட்டில் போடுவதற்கு பதில் இங்கு போட்டுவிட்டான் என்று நினைத்தேன். அவன் வேண்டுமென்றே போட்டிருக்கிறான் என்று இப்போது தோன்றுகிறது. அடுத்த வாரம் வந்து பணம் கேட்பான்’ என்றேன்.

என்னிடமிருந்து வாங்கி கல்பதருவைப் புரட்டிய பூரணி, ஏதோ ஒரு பக்கத்தைக் கண்டதும், அதை கவனமாகப் படிக்க ஆரம்பித்துவிட்டாள். சில நிமிடங்கள் கழித்து என்னை நிமிர்ந்து பார்த்தாள். ‘ஆன்மிகக் கட்டுரை. படித்துப் பாருங்கள். உங்களுக்குப் பிடிக்கும்’ என்றாள்.

‘போனமாதம் இந்தக் கட்டுரை ஆசிரியர் பிரார்த்தனை மூலம் தொழிலை வளர்ப்பது எப்படி என்ற தலைப்பில் எழுதியிருந்தார். வியாபார விருத்தி யந்திரமோ, தாயத்தோ வாங்கச் சொல்வார் என்று நினைத்துக் கொண்டு, அதை வாசிக்கவேயில்லை’ என்றேன்.

‘இந்த மாதம் ஏழு வகையான அறியாமைகளைப் பற்றி எழுதியிருக்கிறார். உங்களுக்கு மிகவும் பயன்படும் என்று கூறி வாய்விட்டுச் சிரித்தாள் பூரணி.

கட்டுரையை வாசித்தேன். மீண்டும் வாசித்தேன். திரும்பவும் வாசித்தேன்.

சிறிது நேரம் தலைக்கு மேலே சுழன்ற மின்விசிறியையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

‘உடனே கல்பதரு அலுவலகம் சென்று, இந்த எழுத்தாளர் எழுதியிருக்கும் புத்தகங்களை வாங்கி வருகிறேன்’ என்றேன்.

புன்னகைத்தாள் பூரணி.

‘நீங்களும் வாருங்களேன்’ என்றேன்.

‘ஓ’ என்று கூறி உடனே கிளம்பினாள் பூரணி.

என் மோட்டார் சைக்கிளில் பூரணி ஏறி, என் தோளைப் பற்றிக் கொண்டு பாதுகாப்பாக, பின்னிருக்கையில் அமர்ந்ததும், எதிர் வீட்டுப் பெண்மணி எங்கள் இருவரையும் கூர்ந்து பார்த்தாள்.

‘அவர் இரண்டு புத்தகங்கள்தான் எழுதி இருக்கிறார்’ என்று பத்திரிக்கை ஆசிரியர் கூற, ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் வாங்கினேன். பத்திரிக்கை ஆசிரியரும் பிரபல எழுத்தாளர்தான் என்றாலும் அவர் எழுதிய நாவல்களை வாங்க எனக்கு விருப்பமில்லை. பூரணி வாங்கினாள்.

வீடு திரும்பும்போது ‘வாசிப்பதற்காக வாங்கவில்லை. அவருக்கு நன்றி சொன்னேன்’ என்றாள் பூரணி.

தேனாம்பேட்டையிலிருந்த ஒரு புத்தகக் கடையைக் கடந்தபோது, காலையில் நான் நூலகத்தில் பார்த்த புத்தகங்கள், கண்ணாடிப் பெட்டியில் இருப்பது கண்ணில் படவும், வண்டியை நிறுத்திவிட்டேன். ‘இத்தனை நாளாக இவை கண்ணில் படவே இல்லை’ என்றேன். அறுபது புத்தகங்-களையும் வாங்கும் ஆர்வம் எழுந்தது. இவ்வளவு செலவு செய்தால் பூரணி என்ன சொல்வாளோ!

‘வாசிக்காதவன் மூட நம்பிக்கையோடு ஒரு புத்தகம் வாங்கினால்கூட தப்பு. வாசிப்பவன் புத்தகக் கடையையே வாங்கினாலும் தப்பில்லை’ என்று கூறிக் கொண்டே கடைக்காரரிடம் எல்லா புத்தகங்களையும் கட்டச் சொன்னாள் பூரணி.

சந்தோஷத்தோடு நான் மோட்டார் சைக்கிளிலும், புத்தக மூட்டையோடு பூரணி ஆட்டோவிலும் வீடு திரும்பினோம்.

(தொடரும்)

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Pappammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

## நம்பிக்கை

எந்த மனிதனுக்கும் பிறர் சொல் பயன்படாது என அன்னை கூறுகிறார்.

வசதியில்லாமல் கஷ்டப்படுவது இயல்பு.

வசதி ஏற்பட்டபின் அதைப் பயன்படுத்த மக்கள் மறுப்பது ஏன்?

அது நம்பிக்கையின் இரகஸ்யம். நம்பிக்கையின் வலிமையைக் காட்டுகிறது.

பிறர் சொல்வதை ஏற்று உயிர் பிழைப்பதைவிட தன் நம்பிக்கையைப் பின்பற்றி இறப்பது மேல் என மனிதன் ஆழ்ந்து நம்புகிறான் என்பது ஆச்சரியமானது.

மனிதன் எதையும் தானே புரிந்து மட்டும் ஏற்றுக் கொள்வான்.

அனைவரும் ஏற்றதைத் தானும் ஏற்றுக்கொள்ள மனிதன் முன் வருவான்.

அமெரிக்காவில் டாக்டர் ஒருவர் ஆயிரக்கணக்கான கான்சர் வியாதியஸ்தரைக் குணப்படுத்தியுள்ளார். பல புத்தகங்கள் எழுதியுள்ளார். மேடைகளில் பிரபலமாகப் பேசுகிறார்.

15 நாளில் கான்சர் குணமாகும் வழியைக் கூறுகிறார்.

ஆயிரக்கணக்காக கான்சரில் மக்கள் வருஷா வருஷம் மடிகிறார்கள். ஏன்?

படித்த நாடு, விபரம் தெரிந்த மக்கள் இதுபோன்ற மருத்துவத்தைப் புறக்கணித்து கான்சரால் மடிவது ஆச்சரியமான செய்தி.

ஒருவர் சொல்லி மனிதன் எதையும் ஏற்க மாட்டான்.
இது மனித சுபாவம்.

## முகவுரை, முன்னுரை, முடிவுரை, முழு உரை, மூல உரை

காதல் வாழ்வின் மூல உரையான முழுவுரை.

1) முக்கிய கருத்துகளை மூலத்தில் சுட்டிக்காட்டுவது முகவுரை.
2) முக்கிய கருத்துகளை வாசகர்கட்கு முழுமையாக நினைவுபடுத்துவது முடிவுரை.
3) முன்னுரையும் முடிவுரையும் இணைந்து பெறும் முழுமையைக் கூறுவது முடிவுரை.
4) மூலவுரை கருத்து மூலத்தை அடைந்து எழுப்பும் குரல்.
5) மூலம் முழுமையை முக்கியமாக்குவது குரல் சொல்லாக ஒலிப்பது.
6) மூலத்தின் குரல் எழுந்து முழுவதும் ஏற்றமாக ஒலிப்பது அம்சமுள்ள எழுத்து.
7) மூலம் ஆதிமூலமாவது ஜீவன் மந்திரமாவது.
8) களவொழுக்கம் கற்புக்கனல் நிறைந்த ஒழுக்கம்.
9) உன்னையறியாதவனை நினைந்து மனம் உருகுவது காதல்.
10) மறந்தவளை மறந்தறியாதது மனம் அறியும் காதல்.
11) மணந்தவனை மனம் ஏற்று அவனில் கரைவது மணாளன் பெற்ற பெரும்பேறு.
12) மனம் திருமணத்தால் நெஞ்சாக மாறி அதனுள் அவள் தெய்வமாக வீற்றிருப்பது திருமணம் நறுமணமாவது.
13) மனமறிந்த வாழ்வு மணக்கத் தவறியதில்லை.
14) கசந்த வாழ்வு காலத்தைக் கடந்த உயர்வு பெறும் நிலையைக் காட்டுகிறது.
15) வாழ்வு தோல்வியையறியாதது என வற்புறுத்துவது காதலில் தோல்வி.
16) கொடுமையான கணவன் கடுமை நிறைந்த காதலன்.
17) சிடுமூஞ்சி என்ற மனைவி வாழ்வைக் கடந்த மனவளம் பெற்றவள்.